# தந்தையின் ஆணை



ஏ.வி.பி.ஆசைத்தம்பி

# தந்தையின் ஆணை

ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம், எல். ஏ.

முத்து புத்தக நிலையம்
மேலப்புலிவார்டு ரோடு • திருச்சி-2

ஜனவரி 1959

உரிமையுடையது

விலை: ரூ. 1—25.

## கதையைப்பற்றி ... ... ...

இந்தக் கதை சாதாரணமானது தான். ஆனால் இன்றைய குடும்பங்களுக்கு வேண்டிய கருத்துக்கள் இதிலே பொதிந்துள்ளன.

சேகர், லீலா: புருஷன் மனைவி சேகருக்கு வேட்கை, லீலாவுக்கு வெட்கம்!

இதன் விளைவு?

இந்தக் கதை விரிவதற்கு அந்தச் சம்பவம் ஒரு முக்கிய காரணம் படித்துப் பாருங்கள்.

**ஆசைத்தம்பி.**

அச்சிட்டோர்:—தியோடர் அச்சகம், திருச்சி.

குறிப்பு:—

*டாக்டர் என்ற தலைப்புள்ள இந்நூலை தந்தையின் ஆணை என்ற தலைப்புடன் வெளியிட்டுள்ளோம்.*

# தந்தையின் ஆணை

## 1. பெரிய குடும்பம்

" ஏழைக்கு ஏனப்பா இத்தனை குழந்தைகள் ? " இப்படி அடிக்கடி பகவானைப் பார்த்து கேட்பார் தேவ ராஜ நாடார். கடவுள் அருளால்தான் குழந்தை பிறக் கிறது என்ற குருட்டு நம்பிக்கை அவரிடம் இருந்தது. பக்தர்களைத்தான் பகவான் சோதிப்பார் என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு ஆறுதலடைவார்.

தேவராஜ நாடாருக்கு நாலு குழந்தைகள். ஆறு பெண்கள் இருந்தால் அரசனும் ஆண்டியாவான் என ஒரு பழமொழி உண்டு. நல்ல வேளை நாடாருக்கு நான் கும் ஆண்கள். என்ன இருந்தாலும் அறுபது ரூபாய் வருமானத்தில் வாழ்க்கை நடத்த முடியுமா ?

பாலைவனம் என்ற சிறு கிராமத்திலேதான் நாடார் குடியிருந்தார். பூர்வீக ஆஸ்தியாக ஒரு சிறு வீடு அவ ருக்கு இருந்தது. அவர் மனைவி வள்ளியம்மாளிடம் ஏதோ கொஞ்சம் தங்க நகைகளும் இருந்தன. தாய் வீடு போட்ட நகை என்றாலும் அவசியமானபோது அதை விற்க அந்த அம்மாள் தயங்கவில்லை. இப்படியாக எல்லாம் கரைந்து வீடு மட்டும் மீதப்பட்டிருந்தது.

நாடார் அவர்கள் விருதுநகரிலே இருந்த குமார் அன் சன்ஸில்தான் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். விருது நகருக்கும் பாலைவனத்திற்கும் நல்ல ரோடு இருந்தாலும் இடையே உள்ள தூரம் ஐந்து மைல். காட்டுப்பாதை வழியாக வந்தால் மூன்று மைல்தான். வயதான காலத்

தில் தினமும் ஆறு மைல் நடந்து செல்வதென்றால் மிகவும் சிரமம் என்று அறிந்த அவரது மனைவி, தன் கடைசி நகையையும் விற்று ஒரு சைக்கிள் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்தாள். தினமும் நாடார் காலை எட்டு மணிக்கெல்லாம் மத்தியான சாப்பாட்டைக் கையில் எடுத்துக் கொண்டு சைக்கிளில் விருதுநகருக்குப் புறப்பட்டு, வேலைகளை முடித்துக்கொண்டு மாலை ஆறு மணிக்குத் திரும்புவார்.

அவருடைய மூத்த மகனை நடராஜன், அடுத்தவனை குமார், மூன்றாவது பையன் சேகர் ஆகியோர் விருதுநகரில் படித்து வந்தார்கள். படிப்புக்குப் பணம் செலவழிக்க வேண்டுமே என்ற கவலை நாடாருக்கு வரவில்லை. அதற்குக் காரணம் விருதுநகரிலே பத்தாவது வகுப்பு வரை இலவசமாகக் கல்வி கற்றுத்தர க்ஷத்திரிய வித்தியாசாலை ஒன்று இருக்கிறது. நடராஜன் பத்தாவது வகுப்பிலும், குமார் எட்டாவது வகுப்பிலும், சேகர் ஆறாவது வகுப்பிலும் வாசித்து வந்தனர், சேகர் சிறு பையனாக இருந்ததால் விருதுநகர் போகும்போதும் வரும் போதும் நாடார் சைக்கிளின் பின்புறம் அமர்ந்துகொள்வான் மற்றவர்கள் நடந்தே செல்வர். கடைசி பையன் மாணிக்கம் நான்கு வயதுள்ள சிறுவனாகையால் வீட்டிலேயே இருந்தான்.

## 2. விபத்து

தீபாவளி நெருங்கிக்கொண்டிருந்தது. அந்த பாலைவன பட்டிக்காட்டிலும் கூட "தீபாவளி ஸ்பெஷல் புரோகிராம்! விருதுநகருக்கு இதுவே முதல் தடவை" என்ற நாடக சினிமா விளம்பரங்களும், முகுந்த விலாஸ்

ஜவுளிக்கடை மூன்றுகலர் சுவரொட்டி விளம்பரங்களும் தடபுடலாக காட்சியளித்தன.

தீபாவளி வந்துவிட்டது, நெருங்கிவிட்டது என் பதை அறிவிக்க 'படார் படார்' என்ற சப்தம் கேட்க ஆரம்பித்து விட்டது. பட்டாடைகளும் பட்டாசும் தானே தீபாவளியின் முக்கிய அம்சம்! பணக்காரர் களுக்கும் புது மாப்பிள்ளைகளுக்கும் தீபாவளி என்றால் கொண்டாட்டம்தானே.

ஆனால் ஏழை மக்கள் ?

பாவம்! தன் மனைவி மக்களைத் திருப்திப் படுத்த கடன்பட்டாவது புத்தாடையும் பட்டாடையும் வாங்கு கிறார்கள். நாடார் குடும்பம் மட்டும் இதற்கு விதிவிலக்கா ? நாளை காலை தீபாவளி. மாணவர்களுக்கெல்லாம் விடு முறை. நடராஜனைத் தவிர பாக்கி மூன்று பேரும் பட் டாசும், புது உடையும் வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றனர்.

காலை எட்டு மணிக்கு விருதுநகருக்குப் புறப்பட இருந்த தன் கணவனிடம் மத்தியான சாப்பாட்டைக் கையிலே கொடுத்து 'நாளை தீபாவளி, பையன்களுக்கு துணியும், பட்டாசுக்கட்டுகளும் எப்படியாவது வரும் போது வாங்கி வாருங்கள்' என்று கூறினாள். 'எப்படி யாவது, என்ற வார்த்தைக்கு கடன் வாங்கியாவது' என்றுதான் அர்த்தம் என்பதைப் புரிந்துகொண்ட நாடார் 'சரி' யென்று தலையசைத்தார். "போய்விட்டு பொழுது சாய்வதற்குள் திரும்பி விடுங்கள், அதிகாலையில் எண்ணை ஸ்நானம் செய்யவேண்டும்" என்று பரிவுடன் கூறி வைத்தாள் வள்ளியம்மாள்.

அப்பாவின் வரவையே குழந்தைகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். புது உடை தரிக்கும்போது வரும் பூரிப்பும், பட்டாசைக் கொளுத்தும் பரமானந்தமும் அவர்களின் கற்பனை கண் முன் வந்து வந்து சென்றது. மத்தியான சாப்பாடுகூட அவர்கள் சரியாக சாப்பிடவில்லை. அப்பா வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

விருதுநகர் சென்ற நாடார் தன் எஜமானிடத்தில் கெஞ்சிக் கதறி இருபது ரூபாய் முன் பணம் பெற்றார். ஐந்து மணிக்கெல்லாம் வேலையை முடித்துவிட்டு 'ரெடி மேடு' துணிக் கடைக்குள் நுழைந்து நபருக்கு ஒன்றாக வாங்கி சைக்கிளின் பின்புறம் கட்டினார். அடுத்தபடியாகப் பட்டாசுக் கடைக்குச் சென்று தினுசுக்கு ஒன்று இரண்டு வாங்கி சைக்கிளின் முன்புறம் கட்டினார். மணி ஆறுக்கு மேலாகிவிட்டது. சைக்கிளில் வேகமாகப் புறப்பட்டார். காட்டுப்பாதை வழியாக சைக்கிள் கடும் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. பாலைவனம் இன்னும் ஒரு பர்லாங் தூரத்தில்தான் இருந்தது. இடையே ஒரு ஆலமரச்சோலை. அதைக் கடந்து வந்துகொண்டிருந்தார்.

'தடார்' என்ற சப்தம் கேட்டது. அடுத்த வினாடி நாடார் கீழே உருண்டார். ஒரு கல்லில் மோதிய சைக்கிள் அவர் பக்கத்திலே விழுந்தது. 'டபார் டபார்' என்ற சப்தம் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தது. சைக்கிளில் கட்டப்பட்டிருந்த 'பட்டாசு' ஒன்றோடு ஒன்று மோதி வெடிக்க ஆரம்பித்தன. நாடார் பட்டாஸ் கட்டுகளின் பக்கத்திலேயே கிடந்தார். அவர் ஆடையிலும் தீப்பிடித்தது. "ஐயோ! அப்பா!" என்று நாடார் அலறினார். தீ நன்றாக பிடித்து எரிய ஆரம்பித்தது, நாடார் சுருண்டு

கீழே விழுந்தார். தூரத்திலே சென்றவர்கள் தீ வெளிச்சத்தைக் கண்டு ஓடி வந்தனர்.

வள்ளியம்மாளுக்கு உடனே செய்தி அனுப்பப்பட்டது. தலைவிரிகோலமாய் ஓடிவந்தாள்; ஆவலோடு காத்திருந்த குழந்தைகள் அழுதுகொண்டு அடுத்து ஓடி வந்தனர். வீட்டிலே கிடத்தப்பட்டார் நாடார். "டாக்டரைக் கூப்பிடுங்கள்! டாக்டரைக் கூப்பிடுங்கள்!" என்று வள்ளியம்மாள் அலறினாள்; கஷ்டத்தோடு கண்ணைத் திறந்த நாடார்–"வள்ளி! டாக்டரை கூப்பிடவா? கிராமத்திலே டாக்டர் ஏது? ஆஸ்பத்திரி ஏது? பைத்தியம் பேசாமல் இரு. என் வாழ்வு அவ்வளவுதான்" என்று சொன்னதும், "ஐயோ! என் அடிவயிற்றிலே தீ வைக்கவா தீபாவளி வந்தது? உங்களுக்கு இந்த நிலை வரவா தீபாவளி வந்தது?"-என்று கூறி ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள் வள்ளியம்மாள். அவளைச் சுற்றி நான்கு குழந்தைகளும் "அப்பா! அப்பா!" — என்று அழுது கொண்டே நின்றனர்.

நாடார் தன் மூத்த மகனை பக்கத்திலே அழைத்து உட்காரவைத்து— "நடராஜா! இனி நான் பிழைக்க மாட்டேன்" "அப்படி சொல்லாதீர்கள் அப்பா!" "இல்லை! இந்த கிராமத்திலே ஒரு டாக்டர் இருந்தால் நான் இறக்கவேண்டியதிருக்காது. என் கடைசி வேண்டுகோள். குடும்பத்தைக் கவனித்துக்கொள். அதோடு... நடராஜா! உன் தம்பி சேகரை ஒரு டாக்டருக்கு! இந்த கிராமத்திலே ஒரு ஆஸ்பத்திரி திறக்க ஏற்பாடு செய்... செய்வாயா?" என்று நாடார் கேட்டு நடராஜன் பதில் சொல்வதற்குள் நாடார் இறந்தார். நாடாரின் பரிதாப மரணத்தைக் கண்டு பாலைவனமே அழுதது. எந்த

தினத்தை இன்ப தினம் என்று எண்ணினர்களோ—அந்த தீபாவளி அவர்களுக்கு துக்க தினமாயிற்று. எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டிய காலை நேரத்திலே நாடார் குடும்பம் 'கண்ணீர் ஸ்நானம்' செய்தது.

## 3. பொறுப்பு

தந்தை இறந்ததால், தான் நினைத்தபடி ஆடலாமே என்று படாடோபத்தை விரும்பும் பணக்காரர் வீட்டு 'குழந்தைகள்' நினைப்பது உண்டு. ஆனல்—வறுமை நிறைந்த குடும்பத்திலே பிறந்த வாலிபர்கள் அப்படி நினைக்க முடியுமா ? நடராஜனுக்கு தந்தை செத்துவிட்டாரே என்ற கவலைமட்டுமல்ல குடும்பப் பொறுப்பை எப்படி ஏற்பது ஏற்று நடத்த இயலுமா என்கிற எண்ணங்கள்தான் மிகுந்த வேதனையை அளித்தது.

குடும்ப பொறுப்பு சாதாரணமானதல்ல. அறிஞர்களின் திட்டமும், மக்களின் வரிப்பணமும் இருந்தால் ஒரு நாட்டை 'முட்டாள்' கூட நிர்வகித்து விடலாம்! ஆனல் வறுமை கோரத்தாண்டவம் புரியும் வீட்டை, அனுபவமற்ற ஒரு வாலிபன் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பது சுலபமா ?

நடராஜன் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தான். தன் தந்தை வேலை பார்த்த குமார் அன் சன்ஸ் உரிமையாளரைக் கண்டு வேலைக்காக முறையிட்டான். முதலாளிகளிலும் இரக்கம் உள்ளவர்கள் இருக்கத் தான் செய்கிருர்கள்! இல்லாவிட்டால் நடராஜனுக்கு வேலை தர ஒப்புக்கொள்வாரா ? மாதம் நாற்பது ரூபாய் சம்பளம் கொடுத்தார் அந்த புண்ணியவான். நடராஜனின்

தாய் மகனின் சம்பாத்தியத்தைக் கண்டு அளவு கடந்த ஆனந்தப்பட்டாள்.

ஆனால்—

நாற்பது ரூபாய் குடும்பத்தைக் காப்பாற்றுமா? குமாரும் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. பாலை வனத்திலேயே ஒரு சிறு பலசரக்கு மளிகை வைத்தான் குமார்! அதோடு மிகவும் உயர்தரமான காளி மார்க் சோடா கலரின் ஏஜென்சியும் சுற்றியிருந்த கிராமங் களுக்கு கிடைத்தது. அப்படி இப்படி என்று குமார் வைத்த கடையிலும் மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேல் கிடைத்துக்கொண்டிருந்தது. நடராஜன் குமார் கூட்டு முயற்சியால் நாடார் குடும்பம் ஓரளவு விருத்தி அடைந்து வந்தது. மூன்றாவது பையனை சேகரும், இளையவனை மாணிக்கமும் ஒரு கவலையும் இன்றி பள்ளியிலே படித்து வந்தனர். சேகரை டாக்டராக்கி தன் தந்தையின் ஆவலை பூர்த்தி செய்யவேண்டும் என நடராஜன் பல திட்டங்கள் போட்டான்.

நடராஜனின் கெட்டிக்காரத்தனத்தை உணர்ந்து பலர் அவனுக்கு பெண் கொடுக்க நீ நான் என்று முந்திக் கொண்டு வந்தனர். பார்வதி என்ற பெண்ணை நடராஜன் திருமணம் செய்துகொண்டான்.

## 4. மூன்று மதினிகள்

நடராஜனுக்கு கல்யாணம் முடிந்தபின் அவனுக்கு சம்பளம் எண்பது ரூபாயாக உயர்த்தப்பட்டது. 'குமார் அன் சன்ஸ் உரிமையாளரை எல்லோரும் தர்மப்பிரபு' என்று சொன்னார்கள். ஆனால் 'கள்ளமார்க்கெட்டிலே

நல்ல சான்ஸ்' என்று நடராஜனுக்கு மட்டும் நன்கு தெரியும்.

தன் தம்பி குமாருக்கும் லட்சுமி என்கிற பெண்ணை நடராஜன் மணமுடித்து வைத்தான். குமாரின் வருமானத்தில் மட்டும் முன்னேற்றம் இல்லை. செலவினங்கள் வர வர அதிகரித்துக்கொண்டே இருந்தது. இரண்டு கல்யாணத்தில் எவ்வளவோ சுருக்கி செலவு செய்தும் ரூபாய் ஆயிரம் வரை ஆகியிருந்தது. நடராஜன் நாணயத்தை நம்பி ஒரு மார்வாடி ஓரளவு கடன் கொடுத்து வந்தான்.

இந்த சமயத்தில் சேகர் எஸ். எஸ். எல். சி. முடித்துவிட்டான். அடுத்த வருடம் 'இன்டர்' படித்துவிட்டு, ஐந்து வருடம் 'டாக்டர்' படிப்பு படிக்க வேண்டியதிருந்தது. ரூபாய் ஐந்தாயிரம் வரை இருந்தால்தான் தன் தம்பி சேகர் டாக்டராக முடியும். இதை நினைத்தால் நடராஜனுக்கு மலைப்பாக இருந்தது. ஆனாலும் அவன் அதைரியப்படவில்லை. மார்வாடியின் உதவியைக்கொண்டு ஒவ்வொரு காரியத்தையும் சாதித்து வந்தான். பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரியில் சேகர் 'இன்டர்' வாசிக்க ஆரம்பித்தான்.

'இன்டர்' முடிக்க இரண்டொரு மாதங்களே இருந்தன. சேகர் படிப்பிலே புத்திசாலியாக இருப்பதைக் கண்ட பலரும் அவனைப் போற்றினார்கள். ஒவ்வொரு பாடத்திலும் முதல் பையனாக சேகர் இருந்து வந்தான்.

சேகருக்கும் சீக்கிரம் கல்யாணம் முடிக்கவேண்டுமென்று வள்ளியம்மாளுக்கு ஒரே ஆசையாக இருந்தன. என்னதான் பணக்கஷ்டம் இருந்தாலும் தாயின் மனப்படி

நடக்கவேண்டும் என்பதே நடராஜனின் குணமாக இருந்தது. சேகருக்கு ஏற்ற பெண்ணை பார்க்கும்படி தாயாரிடம் கூறினன். ஆண்களைவிட ஜனத்தொகையிலே பெண்கள் அதிகமாக இருக்கும்போது மணமகளுக்கா பஞ்சம் ?

சர்வ லட்சணமுடைய லீலா என்ற பெண்ணை தன் மகனுக்கென்று தேர்ந்தெடுத்தாள் வள்ளியம்மாள். ஜாம் ஜாம் என கல்யாணம் முடிந்தது. இளையவனை மாணிக் கத்திற்கு ஒரே ஆனந்தம். தந்தை இல்லையே என்ற எண்ணங்கூட அவனுக்குத் தோன்றவில்லை. மூன்று 'மதினி,மார்களோடு 'அரட்டை' அடிப்பதிலே பொழுது போவதுகூட தெரிவதில்லை.

## 5. முதல் இரவு

சேகரின் கல்யாணத்திலே ஆடம்பரம் இல்லை, படாடோபம் இல்லை என்றுதான் சீர்திருத்தவாதிகள் சொல்லிக்கொண்டார்கள். ஏதோ அம்மி மிதித்து அருந் ததியைப் பார்க்கும் அர்த்தமில்லாத பழக்கமும், புரோ கிதத்துக்கு பார்ப்பனர் வருவதும் எப்படியோ நிறுத்தப் பட்டு விட்டது. அரிசிப்பஞ்சம் இருந்ததால் 'அறுசுவை' உணவு அடியோடு நிறுத்தப்பட்டிருந்தது. ஆனல் அதற்கு பதிலாக தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல ; லீலாவின் தகப்பனர் தன்னை ஒரு சுயமரியாதைக்காரர்' என்று சொல்லிக்கொள்பவர். அப்படி இருந்தும் தன் மகள் கல்யாணத்திற்கு ராசிப் பொருத்தம், ராகுகாலம், நாள் நட்சத்திரம் ஆகியவைகளை பார்த்துதான் கல்யாணம் நடத்தினர்.

'என்னய்யா! நீர் ஓர் சு. ம. ஆயிற்றே? இப்படி மூடப்பழக்கத்திற்கு ஆதரவு கொடுக்கலாமா?' என்று அவரது நண்பர்கள் சிலர் கேட்டுவிட்டனர். அதைக் கேட்டு அவர் பயந்துவிடவில்லை. "பீடி சிகரெட் குடிப்பது கெடுதின்னு தெரிந்தும், பழகின தோசத்தினுலே அதை விட முடியல்ல; அதைப்போலத்தான் மூடத்தனம்னு தெரிந்தும் அதை ஏனே நிறுத்தமுடியல்ல" என்று குதர்க்கமாகவும் குத்தலாகவும் பதில் சொல்ல ஆரம்பித்தார். அதற்குமேல் அவரிடம் யாருமே பேசவில்லை.

தாலி கட்ட சேகர் பெண் வீட்டுக்கு வந்தான். வாசலில் 'ஆரத்தி' எடுக்கப்பட்டது. அதைக் கண்டு அவன் நண்பர்கள் அவனை கேலி செய்தனர். பின் மணச் சடங்கு முடிந்ததும் தம்பதிகளுக்கு கட்டுக் கட்டாக 'திருநீர்' பூசப்பட்டது. அப்புறம் கொட்டு மேளத்துடன் ஊர்வலம் புறப்பட்டது. சேகரும் லீலாவும் ஒரு கோச் வண்டியில் உட்கார்ந்திருந்தனர். அந்த வண்டியிலே எதிரே ஒரு கண்ணுடி மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள—சிரிப்பை பரிமாறிக்கொள்ள வண்டிக் காரனின் முன்னேற்பாடுதான் அந்த கண்ணுடி. சேகர் ஆவலோடு அந்த கண்ணுடியை பார்த்துக்கொண்டிருந்தான். லீலா நிமிர்ந்து பார்ப்பாள் என்று நிமிஷத்துக்கு நிமிஷம் எதிர்பார்த்தான். ஆனுல் ஒரே ஏமாற்றம் லீலா குனிந்தபடியே இருந்தாள். வெட்கம் பெண்களுக்கு அவசியம் என்றுலும் இப்படியா கூனிப்போய் இருக்க வேண்டும்? இத்தனை நாளும் அடிமையாக அடைபட்டிருந்த பெண்ணை விடுதலைப்படுத்தி வெளியே கொண்டு வந்தால் இப்படியா இருப்பது? படித்த சேகர் இப்படி

யெல்லாம் நினைத்தான் ஆனால் வெளி உலகம் தெரியாத லீலாவுக்கு இந்த நாகரீகமெல்லாம் தெரிய முடியுமா?

அதிலும் லீலா புதுப்பெண். பல வருடங்களாக இருட்டிலேயே இருந்தவள். திடீரென்று ஒளியைக் கண்டால் கண்கள் திறக்க முடியாமல் கூசத்தானே செய்யும்? இந்த உண்மை சிலருக்குத் தெரிவதில்லை. திடீரென்று 'பட்டிக்காட்டுப் பெண்' என்று பட்டம் சூட்டி விடுகிறார்கள். சேகர் கூட லீலாவை அப்படித் தான் நினைத்தான்.

சாந்தி முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. சேகரின் நண்பர்கள் அவனுக்கு ஏதேதோ போதனைகள் செய்தார்கள். கல்யாண அனுபவமுள்ள சில நண்பர்கள் மறக்க முடியாத 'முதல் இரவு' காட்சிகளை அழகுபட சேகருக்கு வர்ணித்தார்கள், மேரீஸ்டோப் 'செக்ஸ்' ஆராய்ச்சிகளையும், கீட்ஸ் காதல் கவிதைகளையும், ரெஜினால்டு நாவல்களையும் கரைத்து குடிக்கும் கல்லூரி மாணவனான சேகருக்கு இதெல்லாம் தேவையா?

அன்று இரவு 8-30 மணி இருக்கும் சேகரை அழைக்க பெண் வழியில் இருந்து ஒரு ஆள் வந்தான். போடாத வாசனைத் திரவியமெல்லாம் போட்டு 'ஜம்' என்று சேகர் புறப்பட்டான். பெண் வீட்டிலே மாப் பிள்ளைக்கு தடபுடலான வரவேற்பு. பப்படம் பாயாசம் உள்பட பலமான விருந்து நடந்தது, சாப்பிட்டு முடிந் ததும் சேகர் பெஞ்சின்மீது உட்கார்ந்தான், பெஞ்சில் இருந்து "பொறு பொறு" என்று சப்தம் கேட்டது. பெஞ்சு கனம் பொறுக்கமாட்டாமல் நொறுங்குகிறதோ என்று சேகர் நினைத்தான். ஆனால் அடுத்த விநாடி

கொழுந்தி'களின் 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டது. சேகரும் அசட்டுச் சிரிப்பு சிரித்தான், சமுக்காளத்தைத் தூக்கிப் பார்த்தான், அப்பளம் மாவாக அரைபட்டு இருந்தது. "இப்படியா மாப்பிள்ளையை கேலி செய்வது?" என்று லீலாவின் தகப்பனுர் ஒரு சப்தம் போட்டார்! "உம்! அதற்கென்ன!" என்று சேகர் வாய் முணுமுணுத்தது.

மணி பதினென்று அடித்தது. அப்போதும் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடிக்கொண்டிருந்தார்கள் "உம் சீக்கிரம் போய் படுங்கள்"—என்று லீலாவின் தகப்பனுர் குழந்தைகளை மிரட்டினுர். சேகருக்கு ஏனே அப்போது வெட்கமாய் இருந்தது. வெற்றிலையை மென்றுகொண்டே உட்கார்ந்திருந்தான் சேகர்.

மணி பன்னிரண்டு அடித்தது! சேகருக்கு போதும் போதும் என்ருகிவிட்டது. லீலாவின் தந்தை சேகரை நோக்கி வந்தார். "மாப்ள! இந்த ரூமில் போய் படுங்க!" என்று ஒரு அறையை காட்டினுர் சேகருக்கு. உம்! என்ன உலகம்! கல்யாணம் ஆகுமுன் ஆணும் பெண்ணும் சேர்ந்தால்......பெண்ணுக்குக் கிடைக்கும் பட்டம் 'விபசாரி' ஆணுக்குக் கிடைப்பதோ வரவேற்பல்ல—பாதுகா பட்டாபிஷேகம்! ஆனல்—கல்யாணம் ஆகிவிட்டால்......வரவேற்பு மட்டுமா? விளையாடிக்கொண்டிருக்கும் கள்ளம் கபடற்ற குழந்தைகளைக்கூட விரட்டுகிருர்கள்! லீலாவுடன் தன்னை சேர்த்து வைக்க மாமாவுக்கு எவ்வளவு சிரத்தை இதை நினைக்கும்போது—"கல்யாணம்" என்பது சட்ட பூர்வமான "வியபசாரம்!" என்ற அறிஞன் வாக்கு சேகருக்கு நினைவு வந்தது.

மாமனார் காட்டிய அறைக்குள் சேகர் நுழைந்தான். அங்கே 'மெத்' என்ற பஞ்சணை; ஊதுபத்தியின் 'கம கம' என்ற வாடை. சுற்றிலும் பலவகை பட்சணங்கள் பழவர்க்கங்கள் ஆவலாக காத்திருந்தன. பஞ்சணையில் உட்கார்ந்து மேலே பார்த்தான். பரமசிவனும், பார்வதியும் அணைந்தபடி உள்ள படம் ஒன்று இருந்தது. "சபாஷ்! பள்ளி அறைக்கு ஏற்ற படம்"—என்று சேகரின் உள்ளத்தில் முணுமுணுப்பு ஏற்பட்டது.

அப்போது அறைக்கதவு மீண்டும் திறந்தது. ஒரு கையிலே பாலும், மறுகையில் வெற்றிலை தட்டும் ஏந்திய படி லீலா உள்ளே நுழைந்தாள். இரு தட்டுகளையும் கீழே வைத்துவிட்டு பேசாமல் நின்றாள். இரண்டொரு தடவை பேச நினைத்தான் சேகர். ஆனால்-அவனால் பேச முடியவில்லை. கடைசியில் "உட்காரேன்" என்று சேகர் எப்படியோ சொல்லிவிட்டான். லீலா குனிந்து கொண்டே நின்றாள். "உட்காரமாட்டாயா?" என்று சொல்லிக்கொண்டே சேலையைப் பிடித்தான். லீலா உட்கார்ந்துவிட்டாள். 'உம்! இந்த பழத்தை சாப்பிடேன்"—என்றான் சேகர். "உம்! நீங்கள்..." என்று இழுத்தாள் லீலா!

'முதல் இரவு' பற்றி எண்ணற்ற புத்தகங்களைப் படித்திருக்கிறான் சேகர். அவைகளெல்லாம் மிகைப் படுத்தி எழுதப்பட்டிருக்கும் என்றுகூட எண்ணினான். ஆனால் அனுபவரீதியாக பார்க்கும்போது அத்தனையும் உண்மை என்பதை உணர்ந்தான். உண்மையிலேயே பிறப்பும், முதல் இரவும் வாழ்க்கையிலே மறக்கமுடியாத சிறந்த அம்சம். மனிதன் எத்தனையோ தடவை செத்து

செத்து பிழைக்கிருன்! ஆனுல் ஒரேதடவைதான் பிறக்கிருன். அதேபோலதான் மனிதன் எத்தனை கல்யாணம் செய்தாலும் 'முதல் இரவு' ஒருதடவைதான் வருகிறது. அதனுல்தான் முதல் இரவையும் பிறந்த நாளையும் மக்கள் சிறந்த நாளாக மதிக்கின்றனர்.

இந்த முதல் இரவுக்குப்பின் ஒரு மாதம் வரை சேகர் உல்லாசமாக பொழுதைப் போக்கினுன். ஆனுல் அதற்கு பிறகு?

## 6. பிரிவு

டாக்டர் படிப்புக்காக சென்னை செல்லவேண்டிய வேலையை சேகர் பார்க்கவேண்டியதாயிற்று. வைத்தியக் கல்லூரியிலே சேருவதென்ருல் சாதாரணமானதல்ல. அதிலும் ஏழை எளியவர்கள் வைத்திய கல்லூரியிலும், இஞ்ஜினியரிங் கல்லூரியிலும் சேருவதென்ருல் இமயமலையிலே தவமிருந்து ஈஸ்வரனை பிரத்யட்சமாகக் காண்பதற்கு ஒப்பாகும்! ஏனெனில் அவ்வளவு கஷ்டம் இருந்தது. தகுதி, திறமை என்ற பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களும், சாதாரண ஜனங்களும் சங்கடத்திற்குள்ளாளுர்கள். பிராமணர்களுக்குப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் இருக்கும்போது அதை எல்லோரும் வரவேற்க வேண்டியதுதான். ஆனுல், அரசாங்கத்தில் போதிய பள்ளிக்கூட வசதி இல்லாவிட்டால்......? ஜனத்தொகையிலே மிகவும் குறைந்த அதாவது நூற்றுக்கு மூன்று பேராக உள்ள பிராமணர்கள் மற்ற சகோதரர்களுக்காக விட்டுக்கொடுக்கவேண்டாமா?

விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை பிராமணர்களுக்கு இல்லாததால்தான் 'வகுப்புவாரி பிரதிநிதித்வம் என்ற விகிதாசார முறையை சட்ட பூர்வமாக ஜஸ்டிஸ் கட்சியினர் சென்னை மாகாணத்தில் கொண்டு வந்தனர். இதை வகுப்புவாதம் என்று பிற்போக்கு திட்டம் என்றும் பிராமணர்கள் எதிர்த்தார்கள். விலைவாசிகளை விஷம்போல ஏறவைத்து கொள்ளை லாபமடிக்கும் கள்ள மார்க்கெட்காரரர்கள் நிர்ணய விலை திட்டத்தை எதிர்த்தால் மதிப்பு கொடுக்க முடியுமா? அதைப் போலவே பிராமணர்களின் எதிர்ப்பை யாரும் லட்சியம் செய்ய வில்லை. அந்த திட்டத்தின் பயனால் சேகருக்கு வைத்திய கல்லூரியிலே இடம் கிடைத்தது.

வைத்திய கல்லூரியிலே இடம் கிடைத்த மகிழ்ச்சி ஒரு புறம் இருந்தாலும், வைத்திய படிப்புக்கு செல்ல மார்வாரியிடம் கடன் வாங்க வேண்டுமே என்ற கவலை நடராஜனுக்கு இருக்கத்தான் செய்தது. தன் தம்பிகளின் கல்யாணத்திற்கே நடராஜன் கடன் வாங்கியிருந்தான். மேலும் மேலும் கடன் வாங்க அதிலும் தன் தம்பி சேகர் படிப்புக்காக எதுவும் செய்ய நடராஜன் தயங்கவே இல்லை ஏனெனில் தன் தந்தையின் ஆவலை எப்படியும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு இருந்தது.

விடிந்தால் சேகர் சென்னை புறப்பட வேண்டும். கல்யாணமாகி இரண்டு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் பிரிய வேண்டியதாய் இருந்தது. இந்தக் கவலை எல்லோரையும்விட லீலாவுக்குத்தான் அதிகமாய் இருந்தது. தானும் தன் புருஷன் கூடப்போய், தன் புருஷனுக்கு வேண்டிய பணிவிடைகளெல்லாம் செய்துகொண்டு

சென்னையிலேயே படிப்பு முடியும் வரை இருந்தால்; எவ்வளவு ஆனந்தமாக பொழுதுபோகும்; என்றெல்லாம் எண்ணி எண்ணி பார்த்தாள்! ஆனால் கூடப் போவது முடியக்கூடிய காரியமா? கடன்பட்டு படிக்கச்செல்லும் சேகர் காதலியையும் உடன் அழைத்துச் செல்வது நடக்கக் கூடியதா? ஊஹூம்!

சேகர் லீலா விஷயமாவது ஓரளவு பரவாயில்லை. ஆனால் எண்ணற்ற இளந்தம்பதிகள் ஒருவரை ஒருவர் வறுமையின் காரணமாக பிரிந்து இந்தியாவிலே சித்திர வதைப்படுகின்றனர். எத்தனையோ ஏழை குமாஸ்தாக்கள் மனைவியை ஊரிலே விட்டு விட்டு பம்பாய், கராச்சி, கல்கத்தா ஆகிய தூர ஊர்களுக்குச் சென்று தங்கள் ஜீவனத்தை நடத்துகிறார்கள். வருஷத்துக்கு ஒருமுறை ஊர் வந்து குழந்தை குட்டி மனைவியுடன் ஒரு பத்து நாள் தங்கிப்போவது அபூர்வம். இதைப் போலவே பல ஏழை முஸ்லீம்கள் இளம் மனைவிகளைப் பிரிந்து ரங்கூன், சிங்கப்பூர் போன்ற இடங்களிலே இன்னல் படுகின்றனர். இவர்கள் எல்லோரையும்விட அதிகமாக, இந்த நாட்டிலே எந்த வேலையும் இல்லாதபடி, இலங்கை தேயிலை—ரப்பர் தோட்டங்களிலும், மலேயா, ஆப்பிரிக்கா போன்ற அன்னிய நாடுகளிலும் தாய், தந்தை, மனைவி, மக்கள் ஆகிய அனைவரையும் பிரிந்து பிழைக்க சென்ற தமிழர்கள், அங்கும் பிழைப்பு இல்லாமல், திரும்பவும் வழியில்லாமல் செத்து மடிந்துகொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் கவனிக்கும்போது சேகர் லீலா பிரிவு சாதாரணமானது. சேகர் சந்தோஷமாகவே புறப்பட ஆயத்தமானான். எல்லோரிடமும் சேகர் விடை பெற்று புறப்பட்டான். போகும்போது தன் தம்பி சேகரிடம் தந்தை

சாகும்போது கூறிய வார்த்தைகளை அப்படியே நடராஜன் கூறினன். 'கவனித்து படிக்கிறேன் அண்ணு'—என்று சொல்லிவிட்டு சேகர் வண்டியில் ஏறினன். வண்டியும் புறப்பட்டது. அது மறையும் வரை எல்லோரும் வாசலில் நின்றவாறு பார்த்துக்கொண்டே நின்றுர்கள். சேகரும் தான் மறையும் வரை நாகரீகமாக கைக்குட்டையை கையில் எடுத்து வீசிக்கொண்டே சென்றுன், அப்போது தன் தம்பி வேகமாக ஓடி வருவதைப் பார்த்து சேகர் வண்டியை நிறுத்தினன். மாணிக்கம் ஓடி வந்து ஒரு போட்டோவை சேகர் கையில் கொடுத்தான் அது தந்தையின் படம் என்பதை அறிந்த சேகர் சந்தோஷமாக வாங்கிக்கொண்டு " மாணிக்கம்! நீ நன்ருக படி " என்று சொல்லிவிட்டு வண்டியை ஓட்டச் சொன்னுன்.

## 7. படாடோபம்

பட்டணம் வந்து சேர்ந்த சேகர் நேரே கல்லூரிக்கு வந்து சேர்ந்து தன் படிப்பு வேலையில் தீவிரமாக ஈடு பட்டான். தான் சுகமாக வந்து சேர்ந்த விபரத்திற்கு ஊருக்குக் கடிதமும் போட்டான். அந்தக் கடிதத்திற்கு உடனே பதில் வந்தது. சென்னை வந்ததற்கப்புறம் அது தான் முதல் கடிதமாக இருந்ததால்.....அதைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருந்தது. அதிலும் தன் மனைவி ஏதேனும் எழுதியிருப்பாளோ என்ற எண்ணம் வேறு அவன் ஆவலை அதிகப்படுத்தியது. கடிதத்தை பிரித்து வாசிக்க ஆரம்பித்தான்.

" சிரஞ்சீவி தம்பி சேகருக்கு கடவுள் கிருபையால் சகல பாக்கியமும் உண்டாவதாகவும். இப்பவும் இவ்

விடம் எல்லோரும் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்திற்கு உன் கடிதம் பார்த்து சந்தோஷப்பட்டோம். அடிக்கடி எழுதவும்.

அம்மா, லீலா, மாணிக்கம், மற்ற எல்லோரும் நல்ல சுகமாக இருக்கிறோம். எடுத்த காரியத்தை நீ வெற்றிகரமாக முடிக்கவேண்டும் என்று எல்லோரும் பிரியப்படுகிறோம்.

பட்டிக்காட்டிலே இத்தனை நாளும் இருந்த உனக்கு பட்டணம் ஒரு மாதிரியாகத் தெரியும். பட்டணம் பார்வைக்கு அழகாகவும், பொழுது போவதற்கு சுலப மாகவும் உள்ள இடமாக இருக்கும். அதில் எல்லாம் உன் மனதை லயிக்க விடாதே படிப்பு உண்டு தன் வேலை உண்டு என்று இருக்கவேண்டும். நம் தந்தை இறக்கும்பொழுது சொன்ன வார்த்தைகளை ஒவ்வொரு நிமிஷமும் நினைத்துக் கொண்டிரு. நம் தந்தையின் கனவை நீதான் நிறைவேற்ற வேண்டும். பணத்தைப் பற்றி கவலைப்படாதே. உனக்கு தேவையானபொழுது எழுது அனுப்பி வைக்கிறேன்.

அன்புள்ள அண்ணன்,
நடராஜன்.

கடிதத்தை படித்து முடித்த சேகர் கண்முன் பழைய சம்பவங்களெல்லாம் வந்து நின்றன. எதில் தவறினாலும் படிப்பில் மட்டும் தவறவோ தளரவோ கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.

கல்லூரியிலே படித்த மாணவர்கள் சூட்டும் கோட்டும் போட்டு 'டிப்டாப்பாக' இருந்தார்கள். அவர்களோடு பழகிற சேகர்தான் சாதாரண நாட்டுப்புறத் தானைப்போல இருப்பது கௌரவக் குறைவு, நாகரீகமற்ற

தன்மை என்பதை உணர்ந்தான். தன் அண்ணு எப்படி யும் பணம் அனுப்புவார் என்ற தைரியத்தில் ஊருக்கு சேகர் கடிதம் எழுதினன். எழுதிய இரண்டு தினத்தி லேயே பணமும் வந்துவிட்டது. சேகருக்கு தன்னை அலங்கரிப்பதிலேயே அப்புறம் சிரத்தை எடுத்துக் கொண்டான்.

"ஆடை பாதி! ஆள் பாதி!" — என்று ஓர் பழ மொழி உண்டு. அது உள்ளபடியே சேகரைப் பார்த்தால் லட்சாதிபதியின் பிள்ளையோ என சந்தேகிக்கும்படி ஆகி விட்டது. பணக்கார வீட்டு பிள்ளைகள் முதற்கொண்டு சேகரை பிரம்மாதமாக நினைத்தார்கள். சேகருக்கு ஒரே வியப்பு. உலகமே வெளி வேஷம்! புறையோடிக் கொண்டிருக்கும் புண்ணின் வாடையை தடுக்க வெண் பஞ்சும் தேவைப்படுவது போல, வறுமையின் கோர சுரூபத்தை மறைக்க நவ நாகரீக ஆடை தேவைப் படுகிறது

இந்த உலக உண்மையை உணர்ந்த சேகர் ஆடை விஷயத்தில் மட்டு மல்ல, ஆடம்பர டாம்பீகத்தில்கூட அனுவசியமாக செலவு செய்ய ஆரம்பித்தான்; பள்ளி வாழ்க்கையைப்போல 'ஜாலி' வாழ்க்கை எதுவும் கிடை யாது என்பார்கள்! அதற்கு காரணம் கண்டபடி கவலை யற்று திரிவதற்கு பள்ளி வாழ்க்கையிலே வசதி கிடைக் கிறது எல்லோருக்கும், அவன் ஏழையாக இருக்கட்டும் அல்லது பணக்காரனுக இருக்கட்டும்; 'பணம் தேவை' என்று ஒரு கார்டு எழுதினல் போதும் மறுநாள் பணம் வந்துவிடும். இதை தவிர 'ஜாலி' யாக இருக்க வேறு என்ன வேண்டும்? வருகிற பணம் எப்படி வந்தது? சொந்த பணமா? கடன் வாங்கியதா? நாலு பேரை கெஞ்சி

பிச்சை எடுத்ததா? என்பதெல்லாம் மாணவர்களுக்குத் தெரியாது; படிக்கிற பிள்ளைகளுக்கு அதையெல்லாம் தெரியப்படுத்தினால் அறிவு சரியாக வேலைசெய்யாது என்று கருதி பெற்றோர்கள் தாங்கள் பணம் பெற்ற முறையை எழுதப் பிரியப்படுவதில்லை.

இதைப் போலவே சேகர் பணம் கேட்க கேட்க நடராஜன் பணம் அனுப்பிக்கொண்டிருந்தானே தவிர மார்வாடியிடம் கடன் ரூபாய் இரண்டாயிரத்துக்கு மேல் போய்விட்டது என்று ஒரு வார்த்தைகூட தன் தம்பிக்கு எழுதவில்லை.

சேகர் என்னதான் செலவு செய்தாலும் படிப்பிலே மாத்திரம் முதல் பையனாக இருந்தான். மூன்று வருஷத்திலும் பரீட்சையிலே நல்ல மார்க்குகள் பெற்று சேகர் தேறியிருந்தான். இதனால் நடராஜன் சந்தோசப்பட்டு மேலும் மேலும் தன் தம்பிக்கு பணம் அனுப்பத்தயங்கவில்லை.

## 8. குடும்ப நிர்வாகம்

மார்வாடிக்கு கடன் ஏறிக்கொண்டே சென்றது. அப்படியிருந்தும் மார்வாடி மேலும் கடன் கொடுக்க மறுக்காமல் இருந்தான். இடையிடையே அந்த மார்வாடி நடராஜனிடத்திலே 'உன் தந்தையால்தானப்பா நான் முதலில் இந்த ஊருக்கு வந்தேன்; அந்த விஸ்வாசத்தினால் தான் உனக்கு உதவுகிறேன்' — என்று சொல்லிக்கொள்வான்.

அந்த மார்வாடி சொன்னது என்னமோ உண்மை தான். முதன்முதலாக அந்த பாலைவன பட்டிக்காட்டிற்கு மார்வாடி வந்ததும் குடியிருக்க வீடில்லாமல் திண்டாடினான். மார்வாடிகளைக் கண்டால் அந்த ஊர் மக்களுக்கே

ஓர் வெறுப்பு! வாடகைக்கு வீடு தர எல்லோரும் மறுத்துவிட்டனர். நாடாரின் தயவால்தான் ஒரு சிறு வீடு மார்வாடிக்கு வாடகையாக அமைந்தது. ஆரம்பத்தில் 'பலகாரக்கடை' வைத்த அந்த மார்வாடி பணம் கொடுக்க ஆரம்பித்து, தான் குடியிருந்த வீட்டையே ஒன்றுக்குப் பாதியாக கிரயத்திற்கு வாங்குமளவு வளர்ந்து விட்டான். அதோடு மட்டுமா? இன்னும் பல நில புலன்களுக்கும் நாளடைவில் எஜமானுகி விட்டான். பாவம் அந்தப் பட்டிக்காட்டு மக்களால் வட்டி கூட கொடுக்க முடியாமல் தங்கள் ஆஸ்தியை எழுதிக் கொடுக்கலாயினர்.

நடராஜனிடமும் தேன் ஒழுக பேசினுனே தவிர வட்டியை குறைக்கவோ, வசூலிக்கவோ தவறவில்லை. நடராஜனும் எப்படியோ கஷ்டப்பட்டு வட்டியை மாத்திரம் தவருமல் கட்டி வந்தான். தன் தம்பி குமாரின் பலசரக்கு மளிகையில் இருந்தும், தன் சம்பளத்தில் இருந்தும் கொஞ்சம் மீதப்படுத்தி வட்டிக்குச் செலுத்திஞன். மீதி தேவையானபோது தன் இளைய தம்பி மாணிக்கம் படிப்பிற்கும் சேகருக்கும் கடன் வாங்கி வந்தான்.

அன்று தைப் பொங்கல். தமிழர் திருநாள். தன் தம்பி மாணிக்கத்திற்கு நல்ல சொக்காயும் சட்டையும் தைத்து, தனக்கும் தன் தம்பி குமாருக்கும் சாதாரண வேஷ்டியும் சட்டையும் வாங்கிக்கொண்டு, இரண்டு நாட்டுச் சேலையும், ஒரு நல்ல உயர்ந்த நூல் சேலையும், மற்றெரு சில்க் சேலையும் நடராஜன் வாங்கி வந்தான்.

அன்று எல்லோரும் புத்தாடை கட்ட வேண்டும் என்பதற்காக சேகர் மனைவி லீலாவை அழைத்து சில்க்

சேலையையும், குமார் மனைவி லட்சுமியை அழைத்து நல்ல நூல் சேலையையும், நாட்டுச் சேலை ஒன்றை தன் தாயாருக்கும், மற்றொன்றை தன் மனைவி பார்வதிக்கும் நடராஜன் பிரித்துக் கொடுத்தான்.

எல்லோரும் சேலையை வாங்கிக் கொண்டனர். நடராஜன் மனைவி பார்வதி மட்டும் "சக்தி பெரிதா? சிவன் பெரிதா?" என்ற பிரச்னையைக் கிளப்ப ஆரம்பித்தாள். 'இது என்ன? எடுத்தால் எல்லோருக்கும் ஒரே ரகமான சேலை எடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் எடுக்காமல் இருக்கவேண்டும்; ஒருத்திக்கு சில்க், இன்னொருத்திக்கு நல்லது; எனக்கு மட்டும் மோசமா?—என்று கூறி பாத்யதைப் போராட்டத்தை அன்று ஆரம்பித்தாள். அதைப் பார்த்த நடராஜன் சிரித்துக்கொண்டே "அடி அசடே! நீ தானே வீட்டுக்குப் பெரியவள்!"

"அதற்காக குப்பைச் சேலையைக் கட்டுவதா!"

"இந்த பாரு, லீலா இப்ப வந்தவ வயசுப்பொண்ணு. நீ என்ன இருந்தாலும் கிழவி தானே?"

இப்படி பலவாறுகச்சொல்லி பார்வதியை நடராஜன் திருப்திபடுத்தினான். குடும்பத்தில் ஏதாவது 'கோளாறு' ஏற்பட்டால்...அதை சாமர்த்தியமாக சமாளித்து நிர்வகித்தான் நடராஜன்.

பல வீடுகளிலே மாமியும் மருமகளும் கீரியும் பாம்பு மாக இருப்பதுபோல் நடராஜன் வீட்டில் இருப்பது இல்லை. வள்ளியம்மாள் மருமகளிடம் மிகவும் அன்பாக நடந்து வந்தாள்.

பொதுவாக மருமகளுக்கு 'மாட்டுப்பெண்' என்ற பட்டம் உண்டு. அதாவது புருஷன் வீட்டிற்கு மாடு

போல் உழைக்கவந்த பெண் என்று அர்த்தமாம்! மாடு போல பாடுபட்டு மாமியையும் மணாளனையும் மகிழ்விக்க வேண்டியது மருமகள் கடமை என்ற மடமையான கருத்து பல மங்கையர்களிடம் உண்டு. கல்யாணம் என்பது வீட்டு வேலைசெய்ய ஒரு பெண்ணை விலைக்கு வாங்குவது என்று எண்ணுகிறநிலை இன்னும் இருக்கத்தான் செய்கிறது. மருமகள் வீட்டுக்கு வந்ததும் அதுவரை வேலை வெட்டி பார்த்த மாமி. தான் ஓய்வு எடுத்துகொண்டு ஒய்யாரமாக இருந்து மருமகளை வாட்டி வதைப்பதும் இன்று நாட்டிலே நடக்கத்தான் செய்கிறது. வள்ளியம்மாள் அப்படிப்பட்டவளல்ல. தன் மருமகள் செய்கிற ஒவ்வொரு வேலையிலும் பங்கு பெற்றுவந்தாள். எனவே நடராஜன் வீட்டிலே மாமி மருமகள் தகராறு ஏற்படவே இல்லை இடையிடையே நடராஜன் மனைவி பார்வதி ஏதாவது சண்டித்தனம் செய்வாள். நயத்தாலும் பயத்தாலும் அதை நடராஜன் சரிப்படுத்திக்கொண்டு குடும்பத்தை ஒற்றுமையாக நடத்தி வந்தான். சேகரையும் அடிக்கடி ஊக்குவித்து கடிதம் எழுதினான் நடராஜன்.

இந்த சமயத்தில் நடராஜனுக்கு அடுத்தவனான குமாருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது குழந்தைக்கு தேவராஜன் என்று தன் தந்தையின் பெயரை வைத்தார்கள். தேவராஜன் பிறந்த செய்தி சேகருக்கு அறிவிக்கப்பட்டது.

## 9. கிளர்ச்சி

சேகருக்குப் படிப்பதிலே எவ்விதக் கஷ்டமும் இருந்ததே இல்லை. கேள்வி ஞானத்திலேயே சகலவற்றையும் அறிந்து கொள்ளும் சக்தி சேகருக்கு இருந்தது.

ஒரு காலத்தில் படிப்பிலே கெட்டிக்காரத்தன்மையும் புத்திசாலித்தனமும் பிராமணர்களுக்குத்தான் உண்டு என்ற எண்ணம் தமிழ் நாட்டிலே இருந்தது. அது தவருன எண்ணம் என்பதை சேகரைப் போன்ற மாணவர்கள் மெய்ப்பித்தார்கள்.

ஆனுல் இருபது வருடங்களுக்கு முன்பெல்லாம் பிராமணரல்லாதவர்கள் 'டாக்டர்' பட்டம் பெறுவது என்ருல் மலடி பிள்ளை பெறுவது போல்தான் இருந்தது. அதற்குக் காரணம் பிராமணரல்லாதவர்களுக்கு திறமை அக்கரை கிடையாது என்பதல்ல. "டாக்டர்" பட்டம் வாங்க படிக்க வந்தவன் சமஸ்கிருதம் படிக்கவேண்டும் என்று சட்டம் இருந்தது. சமஸ்கிருதம் பிராமணர்களின் பிறவி சொத்து. ஆனுல் பிராமணரல்லாத திராவிட மக்களுக்கோ அது ஒரு கிரந்தம்! இதனுல் திராவிட மாணவர்கள் டாக்டர் பரீட்சையிலே 'பல்டி' அடிக்க வேண்டியதிருந்தது. இதை புரிந்து கொண்ட ஜஸ்டிஸ் கட்சியினர் "டாக்டர் படிப்புக்கு சமஸ்கிருதம் தேவையில்லை" என்று சட்டத்தை திருத்தினர். அன்றிலிருந்து திராவிட டாக்டர்கள் ஊருக்கு ஊர் பெருக ஆரம்பித்தனர். படிப்பிலும் சேகரைப்போல பல மாணவர்கள் நிபுணர்களாக இருந்தனர்.

சேகருக்கு கடைசி வருடம் ஆரம்பமாகியது. அந்த வருடம் சென்னையிலே கல்லூரிகளிலே மாணவர்களை சேர்க்கும் விஷயத்தில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டன; பிராமண மாணவர்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தால் பள்ளியில் போதிய இடங்கிடைக்காததால் பிரபல பிராமண பத்திரிகைகளும், தேசீய தலைவர்களும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்திரவை கண்டித்து எழுதவும்

பேசவும் செய்தார்கள். அவ்வுத்திரவை ரத்து செய்யும்படி அரசாங்கத்தை நேரடியாகத் தாக்கினார்கள்.

இவைகளை கண்ட பிராமணரல்லாத மாணவர்கள் ஒன்று சேர்ந்தனர். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரித்து ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்தினார்கள்; அதற்கு சேகர் தலைவராக அரும்பணி செய்தான். ஒவ்வொரு கண்டனங்களுக்கும் கூட்டம் போட்டு ஆணித்தரமாக பதில் அளித்தான் சேகர். ஒரு பெரிய அரசியல் வாதியைப் போல, பல இடங்களிலே முழக்கமிட்டான். சேகருக்கு உதவியாக அவன் கூட படித்த கல்லூரி மாணவியான மிஸ். நளினா ரொம்பவும் பாடுபட்டாள். சேகரும் நளினாவும் ஒருவரை ஒருவர் கலந்து ஒவ்வொரு காரியத்தையும் வெற்றிகரமாக நடத்தி வந்தனர்.

"வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏழைகளுக்கு பயன்படாது! பணக்காரர்களுக்குதான் பக்கபலமாக இருக்கும். எனவே இது ஒழியவேண்டும்!"-என்று சிப்பி ஏந்தி சிறை சென்றேன். சிலப்பதிகாரம் படித்தேன் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தான் தோன்றி தேசிய தமிழன் ஒருவர் பல இடங்களிலே பேசி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை சாடினார். அதற்கு மறுப்பு கூற சேகரும் நளினாவும் சென்னை கடற்கரையிலே கூட்டம் போட்டார்கள்.

"வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பணக்காரர்கள் படிக்கத்தான் பயன்படுமாம்! ஏழைகளுக்கு பயன்படாதாம்! நான் அந்த புதித்சாலியை கேட்கிறேன். வகுப்பு பிரதிநிதித்வ உத்திரவு ஒழிந்தால், ஏழைகள் படிக்கவும் பணக்காரர்களுக்கு படிக்க முடியாமலும் போகுகிற நிலை

வருமா? நிச்சயமாக வராது ஏன்? பணவசதி உள்ளவன் எப்போதும் படித்து விடுவான். அதிலும் முற்போக் கடைந்துள்ள பிராமண பணக்காரர்கள் தான் 'தகுதி திறமை' என்ற நிறுவையில் படிக்க முடியும். பிற்போக் காக உள்ள திராவிட சமுதாய பணக்காரர்கள் என்னதான் 'குட்டிகரணம்' போட்டாலும் இடம் கிடைக்காது. எனவே வகுப்புவாரி பிரதிநிதித்வம் இருந்தால் திராவிடர் களுக்கு என்று இடம் ஒதுக்கப்படும். அதில் திராவிட பணக்காரர்களுக்கு இடம் கிடைக்கும்; என்னைப் போன்ற ஏழை திராவிடனுக்கும் இடம் கிடைக்கும்"— என்று சேகர் ஆவேசமாக பேசினான்.

அடுத்தபடியாக மிஸ், நளினி அழகான நல்ல உதா ரணத்தோடு பேசினாள்.

"உணவு ரேஷனைப் போன்றதுதான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம். உணவு அதிகம் இல்லா விட்டால் அதை பணக்காரர்கள் வாங்கி பதுக்கி விடுவார்கள். உணவு தட்டு ஏற்பட்டு, அதிக விலை கொடுத்து ஏழைகள் வாங்க முடியாமல் கஷ்டப்படுவார்கள். பணக்காரர்கள் பதுக்காமல் இருப்பதற்காகவே 'ரேஷன் சட்டம்!' அதைப்போலவே கல்லூரிகள் குறைவாக இருக்கும் நாட்டில் பணக்காரர்களைப்போல் முற்போக்கடைந்த பிராமணர்கள் எண்ணிக்கைக்கு மேல் அதிக இடம் பெற்றுவிடாமல் தடுப்பதற்கு எல்லோருக்கும் சமமான நீதி வழங்குவதற்கு ஏற்பட்ட சட்டந்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம்! இதை வகுப்பு துவேஷம் என்றால் ரேஷன் முறை அரிசி துவேஷமாக இருக்கவேண்டும்!"

இப்படி இருவர் பேச்சும் சென்னை மாகாணம் மட்டு மல்ல இந்தியா பூராவும் எதிரொலித்தது. சர்க்காரும் உண்மை உணர்ந்து வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள் கைக்கு ஆதரவு காட்டினார்கள். கோபமடைந்த பிராம ணர்கள் மகாத்மா காந்தியிடம் சென்று "சென்னை ராஜ்யத்திலே எங்களுக்கு படிக்க பள்ளியில் இடமில்லை" —என்று முறையிட்டார்கள். மகாத்மாவும்—"ஓ! என் பிராமணர்களே! பகவானுக்கு அடுத்தபடியாக உள்ள உங்களுக்கு படிப்பு எதற்கு? பஜனை செய்யுங்கள்! அதுவே போதும்!"—என்று சிரித்துக்கொண்டே கூறி விட்டார். அப்புறம் என்ன செய்வது? அரவத்தைப் போல படத்தை சுருக்கிக்கொண்டார்கள்.

## 10. மிஸ். நளினு

கன்லூரிகளிலே ஓரளவு அமைதி நிலவியது. மாண வர்கள் தங்கள் கடமைகளை செவ்வனே செய்துவந்தார்கள். வகுப்புரிமை போராட்டத்திற்குப்பின் நளினுவும், சேகரும் இணைபிரியா நண்பர்களாயினர். உல்லாசமாக உலவச் செல்வதில் இருந்து உட்கார்ந்து படிப்பது வரை இரு வரும் ஒன்ருகவே இருந்தனர்.

மிஸ். நளினு திருமங்கலத்தைச் சேர்ந்தவள்; பெரிய பணக்காரி' ஆனல், தாய் தந்தையை இழந்து தன்னந் தனியாக உள்ள ஓர் கன்னி. கல்யாணம் செய்துகொள் ளும் வாழ்க்கையை கசப்பாகக் கருதினுள். பிரமச்சாரி யாகவே இருந்துகொண்டு பிறருக்கும் தேசத்திற்கும் தொண்டு செய்ய வேண்டும் என்று எண்ணினுள். இன் றைய நாட்டுக்கு டாக்டர்கள் அதிகம் தேவை என்பதை அவள் உணர்ந்தே வைத்தியப் படிப்புக்காக சென்னை

வந்தாள். படிப்பு முடிந்ததும் சொந்தத்தில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி வைத்து ஏழை எளியவர்களுக்கும் கிராம மக்களுக்கும் பேருதவி செய்யவேண்டும் என்பது அவள் நீண்ட நாள் கனவு சேகரை சிறந்த நண்பனாக நளினா மதித்தாள்.

சேகருக்கும் நளினாவிடத்தில் ஓர் தனி மதிப்பு இருந்தது. அதிலும் தன்னுடைய கிராமமான பாலைவன கிராமத்திற்கும் திருமங்கலத்திற்கும் இருபது மைல் தூரந் தான் என்பதை அறிந்த சேகர், நளினா மிகவும் நெருங்கிய வளாக இருப்பதை அறிந்து ஆனந்தப்பட்டான். ஆனால், நளினாவின் நாகரீக வாழ்வையும் படாடோப போக்கை யும் கண்ட சேகர், அவளிடம் தான் ஒரு பட்டிக்காட்டான் என்றும், பரம ஏழை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. சொன்னால் தன்னைப்பற்றி கீழ்தரமாக நளினா நினைத்து விடுவாள் என்று கருதிய சேகர், தானும் ஓர் அனாதை என்றும் சொந்த ஊர் விருதுநகர் என்றும் கஷ்டப்பட்டு பொய் சொல்லி விட்டான். பிறந்த இடத் தையும், பெற்ற தாயையும். சிறந்த சகோதரர்களையும் மறந்து மாபெரும் பொய் கூறிய சேகர் தனக்கு விவாகம் ஆகிவிட்டது என்று சொல்வானா? சொல்லத் தான் உள்ளம் இடங்கொடுக்குமா? அதிலும் "தன் மனைவி ஓர் பட்டிக்காடு" என்று சொல்லவே வெட்கப்பட்டான்.

சேகரும் தன்னையும் போன்ற ஓர் அனாதை என்று உணர்ந்த நளினா மிகவும் சந்தோஷப்பட்டாள். அனா தைக்கு அனாதையே துணை! இருவரும் டாக்டராகி ஓர் ஆஸ்பத்திரி வைத்தால்...? இப்படி லட்சிய கனவு கண்டாள் நளினா.

சேகர் நளினு நட்பு நாளுக்கு நாள் வளர்ந்தது. இருவரும் இணைபிரியாதவர்களாயினர். சேகருக்கு வேண்டிய உதவி எல்லாம் நளினு செய்தாள்; இசையில் மிகவும் பயிற்சி பெற்ற நளினு. சேகருக்கு சங்கீத ஞானத்தை ஊட்டினுள். பியோனு வாசிக்கவும், பிடில் வாசிக்கவும் சேகருக்கு நளினு கற்றுக்கொடுத்தாள். நாளடைவில் அதிலும் சேகர் கெட்டிக்காரனுனுன். பிரதி தினமும் ஒரே குஷிதான். சேகர் பிடில் வாசிப்பான்; நளினு பின்பாட்டு பாடுவாள். பியோனு வாசித்தால்...... தோகையை விரித்து மயில்போல் ஆடுவாள், குயில்போல் பாடிக் கொண்டே. அதைக் கண்டு சேகர் களிப்படைவான். இப்படியே கவலையின்றி காலம் கடந்து வந்தது. இருவரும் கடைசி வருடமாக டாக்டர் பரீட்சை எழுதினர்.

## 11. பிடில்

சேகரும் நளினுவும் பரீட்சையில் தேறி விட்டால்... அன்று தான் அவர்களுக்கு கல்லூரியின் கடைசி நாட்கள் ஆம்! அன்று முதல் விடுமுறை ஏன்? அவர்களுக்கு கல்லூரி வாழ்வில் இருந்து விடுதலை. இனி அவர்கள் வீட்டுக்குப் போகலாம்.

நளினு தன் சென்னை இருப்பிடத்தைக் காலி செய்ய சாமான்களை எல்லாம் கட்டினுள். சேகரும் துணையாக வேலை செய்தான். அன்று மாலை வரை வேலை சரியாக இருந்தது இருவருக்கும், நளினுவின் சாமான்கள் ஒரு லாரி நிறைய இருந்தது திருமங்கலம் செல்ல ஒரு லாரியே பேசி முடிக்கப்பட்டு சாமான் அனுப்பப்பட்டன.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் இரவு எட்டு மணிக்கு தான் சென்னையை விட்டு கிளம்புகிறது. இருவரும் நினைத்திருந்தால்... அன்றே புறப்பட்டிருக்கலாம். நளினு தான் நாளை போகலாம் என்று சொல்லி விட்டாள். மறுத்துப் பேச சேகருக்கு ஏனோ மனமில்லை. அன்று இரவு "இருளுக்குப் பின்"—என்ற நாடகம் பார்க்கச் சென்றூர்கள்.

காஸ்மா பாலிட்டன் கிளப் அமைச்சூர் நடிகர்களால் நடிக்கப்பட்ட அந்த நாடகம் மிகவும் நேர்த்தியாக இருந்தது. அதற்குக் காரணம் அந்த நாடகம் இருவர் வாழ்க்கையையும் இலேசாக பிரதிபலித்துக் காண்பித்தது. இருளுக்குப் பின் நிச்சயம் ஒளி உண்டு என்ற நம்பிக்கையுடன் இரவு ஒரு மணிக்கு தியேட்டரை விட்டு வெளியேறினர். டேக்சி ஒன்று வைத்து நேராக இருப்பிடத்திற்கு வந்தனர்.

அன்று இருவருக்கும் ஏனோ தூக்கம் வரவில்லை. கொஞ்ச நேரம் இருவரிடையும் நாடக விமர்சனம் அரட்டை! இப்படியே மணி மூன்று அடித்தது. தூக்கம் இருவரையும் பலமாக முற்றுகை இட்டது. தோற்று விட்டார்கள். தூங்கினூர்கள் தூங்கினூர்கள் காலை ஒன்பது மணி வரை! பின்னர் எழுந்து காலை காப்பியை முடித்து விட்டு இருவரும் பஜாருக்குப் புறப்பட்டார்கள். நளினு ஒரு அழகான பிடில் ஒன்று வாங்கினுள். இன்னும் பல சாமான் வாங்கி முடித்து விட்டு இருவரும் வந்தனர்.

"சேகர்! விருதுநகரில் உள்ள விலாசம் என்ன?"

"அதைக்கு விலாசமாவது! கைலாசமாவது! போனதும் எழுதுகிறேன், நளினு!

"ஏன் என் கூடவே இருந்து விடுங்களேன்?"

"அதற்கென்ன பரீட்சை ரிசல்ட் வரட்டும் பார்க்கலாம்."

"பரீட்சை பாசாகி விட்டால்?..."

"உன் டிஸ்பென்சரியில் நான் ஓர் ஊழியன்!"

"கேலிதான்!... சேகர்! இருவரும் சேர்ந்து ஒரு பெரிய டிஸ்பென்சரி வைக்க வேண்டும். ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் உதவ வேண்டும். விசேஷமாக கிராம மக்களுக்காக அதிக நேரத்தை செலவிட வேண்டும்.

"ஓ! அப்படியே செய்யலாம்."

இந்த முடிவோடு இருவரும் இரயில் ஏறினர். இரயிலிலும் வெகு நேரம் வரை இருவரும் எதிர்காலத்தில் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி பேசினர். மறுநாள் காலை மதுரை வந்தது. அங்கே இருவரும் காப்பி சாப்பிட்டனர். வண்டியும் விருதுநகரை நோக்கி புறப்பட்டது. திருமங்கலம் வர பத்து மைல்கள்தான் இருந்தன. நளினா புதிதாக வாங்கிய பிடிலை கையில் எடுத்தாள்.

"சேகர்!...நீங்கள் என்னை மறந்துவிடாமல் இருக்க—உங்கள் சங்கீத ஞானம் நாளுக்கு நாள் வளர—இந்த பிடிலை' பரிசளிக்கிறேன், ஏற்றுக்கொள்ளுங்கள்."

"நளினா!...இந்த அனாதைக்கு இது எதற்கு?"

"ஆதரவு தர சேகர்!...சஞ்சலம் ஏற்படும்போது இதனோடு கொஞ்சுங்கள்! சங்கீதம் சாந்தியை தரும்."

"நளினா! நீ செய்த ஒவ்வொரு உதவியையும் உயிருள்ள வரை மறக்க மாட்டேன்."

சேகர் பிடிலை பெற்றுக்கொண்டு பெட்டியினுள் வைக்கப் போனான். அப்போது நளினா தடுத்து—

“சேகர்! இந்த இரண்டாம் வகுப்பு வண்டியில் நம் இருவரைத் தவிர ஒருவரும் இல்லை. ஏன் உள்ளே வைக்கப்போகிறீர்கள்? பிடிலை மீட்டி வாசியுங்கள்!”

நளினாவின் வேண்டுகோளை சேகரால் தட்ட முடியவில்லை. யாழ் மீட்டி வாசிக்க ஆரம்பித்தான்; அதை அனுபவித்து கேட்க ஆரம்பித்தாள் நளினா. ஆனால் திருமங்கலம் வந்தது. “ஊர் போனதும் உடனே கடிதம் போடுங்கள்” என்று கூறி பிரிய முடியாமல் பிரிந்தாள் நளினா.

## 12. கனவும் காட்சியும்

திருமங்கலத்தை விட்டு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் புறப்பட்டது. மறையும் வரை இருவரும் ஒருவரை ஒருவர் கைகளை ஆட்டி ‘குட்பை’ சொல்லிக்கொண்டனர். ரயில் வேகமாக சென்றது. காற்று ‘விர் விர்’ என்று புயல் போல் அடித்தது. சேகர் மனமும் அப்போது அப்படித்தான் இருந்தது. இரயிலின் வேகத்தை விட அவன் மனம் கடந்த காலத்தை நோக்கிக் கடுமையான வேகத்தோடு சென்றது.

அங்கே சேகர் பிடில் வாசித்தான். நளினா பதம் பாடிக்கொண்டே ஆடினாள்; அப்புறம் நளினா அயர்ந்து விட்டாள்; அவர் அயர்ச்சியை தீர்க்க, உணர்ச்சிமிக்க ஒரு பாடலை சேகர் பாடினான். இந்த நினைவு பூரணமாக வருவதற்குள் விருதுநகர் வந்து விட்டது. பக்கத்து ஊரான பாலைவனம் செல்ல ஒரு ‘ஜட்காவை’ வாடகை பேசி புறப்பட்டான் சேகர்.

சேகரை அவன் மனைவி லீலா மாலை போட்டு வர வேற்றாள்; இருவரும் ஆனந்தமாக கட்டித் தழுவிக்

கொண்டார்கள்; சாப்பிட உட்கார்ந்த சேகருக்கு லீலா பரிமாறினாள்; அப்போது சேகர் லீலாவை பரிமாற விடாமல் தடுத்து, தனக்கு அடுத்து உட்கார வைத்து அவளையும் சாப்பிடச் சொன்னான்; ஆனால் லீலாவோ "கணவனுக்கு முந்தி மனைவி சாப்பிடக்கூடாது"—என்று சொல்லி எழுந்துவிட முயற்சித்தாள்; 'பட்டிக் காட்டு வழக்கத்தை விட்டுவிடு'—என்று சேகர் கூறி சேலையைப் பிடித்துக்கொண்டான் லீலாவும் சாப்பிட உட்கார்ந்தாள்; லீலா வாயில் சேகர் பலகாரத்தை ஊட்டினான்; வெட்கப்பட்டுக்கொண்டே லீலா சாப்பிட்டாள். சாப்பாடு முடிந்ததும் சேகரை ஊஞ்சலில் உட்கார வைத்தாள் லீலா. பின்னர் வெற்றிலை மடித்து கொடுத்து ஊஞ்சலை ஆட்டினாள்; சேகர் பிடிலை எடுத்து வாசித்தான். லீலா நளினமாக ஆடுவதை சேகர் பார்த்து பரவசமடைந்தான். ஆகா! லீலா தனக்கு மனைவியாக கிடைத்தது மாபெரும்பாக்கியம் என்று நினைத்தான் சேகர்.

அப்போது—'பாலைவனம் வந்திருச்சுங்க'—என்று ஜட்கா வண்டிக்காரன் கூறியதும், கற்பனை உலகில் இருந்து சேகர் விடுபட்டு, தன் வீட்டை வண்டிக்கார னுக்குக் காட்டினான். வண்டியும் சேகர் வீட்டின் முன் வந்து நின்றது. வண்டி சப்தத்தைக் கேட்டதும், வள்ளி யம்மாள், நடராஜன், குமார், மாணிக்கம் ஆகியோர் வாச லுக்கு ஓடி வந்தனர் சேகரை வரவேற்க.

சேகர் எல்லோரையும் வணங்கினான். "சேகர்! வாப்பா!" என்று அன்பாக அழைத்துச் சென்றான் நடராஜன். வரும் வழியில் வித விதமாகக் கற்பனை செய்துகொண்டு வந்த சேகருக்கு தன்னை வரவேற்க லீலா வாசலருகே வரவில்லையே என்று வருந்தினான்.

வீட்டுக்குள்ளே சென்ற பின்னும் கூட, லீலா சேகர் எதிரே தலையை நீட்டவில்லை. ஆண்களோடு அதிகமாக பழக வசதி இல்லாத பட்டிக்காட்டுப் பெண் தானே லீலா புதுப்பெண்ணைப்போல வெட்கப்பட்டுக்கொண்டே உள்ளேயே இருந்தாள். சென்னை சென்று திரும்பிய சேகருக்கு இது ஏனோ பிடிக்கவில்லை.

சேகருக்குப் பிரியமான பட்சண வகைகள் எல்லாம் அன்று தயாரிக்கப்பட்டது; மத்தியான சாப்பாட்டிற்குப் பின் ஊஞ்சலிலே போய் உட்கார்ந்தான் சேகர்! ஆனால் கற்பனையில் கண்டபடி ஊஞ்சலை ஆட்டிவிட ஒருவரும் வரவில்லை. "லீலா வெற்றிலை கொண்டுவா" — என்று சேகர் ஊஞ்சலில் உட்கார்ந்தபடியே உள்ளே பார்த்துக் கொண்டே கூறினான்; சிறிது நேரத்திற்கெல்லாம் 'அண்ணா! அண்ணி வெத்திலை கொடுத்துச்சு' — என்று மாணிக்கம் வெற்றிலைத் தட்டை கொண்டுவந்து வைத்தான். அதிலும் சேகருக்கு ஒரு பெரிய ஏமாற்றமாக இருந்தது. அடுத்து பிடிலை எடுத்தான், அதை வாசிக்க ஆரம்பிப்பதற்கு முன்பே "லீலா! நிச்சயமாக நாட்டிய மாடமாட்டாள்" என்பதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால்...... "உம்! சுத்த பட்டிக் காடு"—என்று சேகர் வாய் முணுமுணுத்திருக்குமா?

அன்று மாலை உலாவப் போகவேண்டும் என்று நினைத்தான் சேகர். சென்னையில் இருந்தால்... திருவல்லிக் கேணி பீச்சுக்கும் நளினாவுடன் செல்வான், ஆனால் பாலைவனத்தில்? பீச் கிடையாது பெரிய ஏரி இருந்தது. அந்தப் பக்கம் போகலாம் என்று நினைத்தான். துணைக்கு நளினாவுக்கு பதில் யாரை அழைப்பது? ஏன் லீலாவை கூப்பிட்டால்...? லீலா வாழ்க்கைத் துணைவிதானே!

"லீலா! லீலா!" என்று கூப்பிட்டுக்கொண்டே சேகர் உள்ளே சென்ருன். இரவு உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த லீலா எழுந்து நின்ருள். 'வாயேன் வாக்கிங் போய்வரலாம்' என்று லீலாவைப் பார்த்துக் கொண்டே சேகர் கூறிஞன். லீலாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'நீங்கள் போய்விட்டு சீக்கிரம் வாருங்கள்; சாப்பாட்டு வேலையை நான் கவனித்து வைக்கிறேன்' —என்று லீலா சொல்லிவிட்டாள். பிடிலை எடுத்துக் கொண்டு சேகர் வெளியேறிஞன். தனிமையாகப் போய் அமர்ந்து சேகர் பிடிலை இசைத்தான். நளிஞ கூடப் பாடுவது போல் அவன் மனதிலே ஏதோ ஒரு சக்தி ரீங்காரம் செய்தது. ஆனல் சேகர் மனதிலே அமைதி என்பதே இல்லை.

## 13. நாம் ஒன்று நினைத்தால்... ?

பட்டிக்காட்டு வாழ்க்கை சேகருக்கு எட்டிக்காயாக இருந்தது. பட்டணமாக இருந்தால் பாடும் ரேடியோ, ஓடும் வாகனதிகள், நடமாடும் ஜனக்கூட்டம், நாடகம். சினிமா இன்னேரென்ன எல்லாம் இருக்கும். ஆனல் பட்டிக்காட்டில்...அதுவும் பாலைவனத்தில்? விருதுநகர் பெரிய ஊர் தான்; ஐம்பதினுயிரம் மக்களுக்கு மேல் வசிக்கிருர்கள்: வர்த்தகத் துறையில் விருதுநகரைத் தென்னிந்திய பம்பாய் என்று பூகோள ஆசிரியர்கள் கூறு கிருர்கள். இத்தனை பெயர் இருந்தும் அங்கே சென்ட்ரல் சினிமா, நியூ முத்து டாக்கீஸ், ராதா டாக்கீஸ் என்று மூன்று சினிமா தியேட்டர்கள் தான் இருக்கின்றன. அவை மூன்றும் லாபகரமாய் ஓடுவது என்பது குதிரைக் கொம்பை காண்பதுபோலதான். அப்படி இருக்க பாலை வனத்தில் சினிமா இருக்க முடியுமா?

இதையெல்லாம் கண்ட சேகர் பட்டண வாழ்க்கையே மேல் என்று நினைத்தான். அதிலும் தன் போக்கை அறிந்து கொள்ளாத மனைவியை நினைத்தால்......கிராம வாழ்க்கை சேகருக்கு நரக வாழ்க்கையாக இருந்தது. கொஞ்ச நேரம் படிலும், அப்புறம் தன் அண்ணன் குமாரின் மகன் தேவராஜனுடனும் விளையாடிக்கொண்டே இருப்பான். தேவராஜனின் மழலைப் பேச்சில் சிறிது மகிழ்ச்சி அடைந்தான். மாலை நேரங்களிலே விருதுநகர் வரை நடந்து செல்வான். இப்படியே நாட்கள் கடந்து கொண்டிருந்தன.

அன்று சேகர் ‘நல்ல தீர்ப்பு’ என்ற புத்தகம் படித்துக்கொண்டிருந்தான். அப்போது தன் அண்ணன் நடராஜன் அங்கு வருவதைக்கண்டு சேகர் எழுந்து நின்றான். பிறகு இருவருமே உட்கார்ந்தார்கள்.

"சேகர்! நமது கிராமத்தில் சீக்கிரம் ஒரு ஆஸ்பத்திரி திறக்க வேண்டும்."

இதைக் கேட்ட சேகரின் முகம் மாறியது. கிராம வாழ்க்கையை வெறுக்கும் சேகருக்கு அது பிடிக்குமா?

"அண்ணா! கிராமத்தில் ஆஸ்பத்திரி வைத்தால்... லாபகரமாய் நடக்காது!"

இப்படி இழுத்துக்கொண்டே சேகர் கூறியதும் நடராஜனுக்கு முகம் சிவந்தது முகத்திலே கோபக்குறி தென்பட்டது.

"தம்பி! தந்தை இறக்கும்போது கேட்டுக்கொண்ட வேண்டுகோளை மறந்தாயா?"

"இல்லை அண்ணா! நடப்பைச் சொன்னேன்; பின் உங்கள் இஷ்டம்."

இந்த பதில் சேகர் வாயிலிருந்து அலட்சியமாகவே வந்தது. ஆனால், நடராஜன் அவ்வளவாக கவனிக்க வில்லை.

"ஆமாம்! இந்த கிராமத்தில் ஆஸ்பத்திரி வைப்ப தென்றால் எவ்வளவு செலவாகும், சேகர்?"

"ஆஸ்பத்திரியின் விஸ்தரிப்புக்கு ஏற்ப செலவு இருக்கும்?"

"சரி! ரிசல்ட் வந்ததும் ஆஸ்பத்திரி வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்."

இதற்குமேல் எதுவும் சொல்லாமல் நடராஜன் எழுந்து சென்றான். ஒரு சிறிய ஆஸ்பத்திரி வைக்கத் தானே ஒரு கணக்கு போட்டான். எப்படி இருந்தாலும் ரூபாய் ஐயாயிரம் தேவைப்படும் என்பதை உணர்ந்தான். பணத்திற்கு என்ன செய்வது? சோபாவிலே சாய்ந்த வண்ணம் யோசித்தான்; அவன் முகம் மலர்ந்தது.

நடராஜன் தனக்கு கடன் கொடுத்த மார்வாரியிடம் சென்று......

"ஐயா! இந்த கிராமத்திலே ஒரு ஆஸ்பத்திரி இல்லா ததால்தான் என் தந்தை மடிந்தார்! அவர் சாகும்போது ......எப்படியும் என் தம்பியை படிக்கவைத்து ஒரு ஆஸ்பத்திரி கட்டவேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டார். அதன்படி என் தம்பி சேகர் படித்துவிட் டான். ஆஸ்பத்திரி வைக்க தாங்கள்தான் பண உதவி செய்யவேண்டும்."

"அதற்கென்ன நடராஜா! ரூபாய் ஐயாயிரம் வேணுமா? அல்லது பத்தாயிரமா?"

"முதலில் ரூபாய் ஐயாயிரம் போதும்."

"இதோ எண்ணிக்கொள் ரூபாய் ஐயாயிரம்!"

நடராஜனின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. மார்வாடியிடம் நூறு ரூபாய் நோட்டுகளாக வாங்கி எண்ண ஆரம்பித்தான். "பணம் சரியாய் இருக்கிறதைய்யா" என்று சொல்லி, மார்வாடியிடம் விடைபெற்று வீட்டுக்கு வந்த நடராஜன், தன் தாயாரிடமும், மற்றவர்களிடமும் கூறி ஆனந்தமாக சிரித்தான். அப்புறம் தன் தம்பி சேகரோடு ஆஸ்பத்திரிக்கு வேண்டிய சாமான்கள் வாங்க, மதுரை, சென்னை ஆகிய இடங்களுக்கு சென்று திரும்பினான். ஆஸ்பத்திரியும் ஓரளவு முடிந்தது. தன் தம்பி டாக்டராகவும், லீலா நர்சாகவும் எல்லோருக்கும் பணி செய்தார்கள். கிராம மக்கள் அனைவரும் "தேவ ராஜர் வாழ்க—அவர் பிள்ளைகள் வாழ்க—டாக்டர் சேகர் வாழ்க" என்று கோஷமிட்டு ஊர்வலம் வந்தனர். அதைப் பார்க்கப் பார்க்க நடராஜனுக்கு ஒரே ஆனந்தம்."

அப்போது "நடராஜா! சாப்பிட வாப்பா!" என்று வள்ளியம்மாள் கூப்பிட்டாள்; சோபாவில் படுத்திருந்த நடராஜன் திடுக்கிட்டு எழுந்தான். இத்தனையும் நேரம் கனவா கண்டோம்?"—இப்படி எண்ணிய அவன் மனம் பெருமூச்சுவிட்டது. *கனவாய்* இருந்தால் என்ன? அதையும் கண்முன் நடத்தி காட்ட முடியாதா? மார்வாடியிடம் பணம் வாங்கினால்......எல்லா வேலையும் எளிதில் முடிந்துவிடும்...என்று திடம் செய்துகொண்டு சாப்பிடச் சென்றான். நடராஜன்.

சாப்பாடு முடிந்ததும், தன் தாய் வள்ளியம்மாளிடம் விபரம் பூராவையும் கூறி, மார்வாடியைப் பார்க்க நடராஜன் புறப்பட்டான். தாயாரும் வெற்றியோடு

திரும்பிவர ஆசீர்வதித்தாள். ஆனால் பழைய பாக்கியே ரூபாய் ஐந்தாயிரத்துக்கு மேல் இருப்பதாகவும், இனி ஒரு பைசா கூட தாமுடியாது என்றும் மார்வாடி சொல்லி விட்டான்.

## 14. இனி ஏது செய்வேன்

வேறு வழியின்றி வேதனையோடு நடராஜன் வீடு திரும்பினான். தான் கண்ட கனவு ஒரே வினாடியில் தகர்த்தெறியப்பட்டதை நினைக்க நினைக்க அவன் தலை சுழல ஆரம்பித்தது.

சோர்ந்து போய் சோபாவிலே சாய்ந்தான். பணம் இல்லாமல் எப்படி ஆஸ்பத்திரி வைப்பது? தன் தம்பி டாக்டராகியும் சர்க்கார் ஆஸ்பத்திரிக்குத்தான் செல்ல வேண்டுமா? தந்தையின் ஆசை நிறைவேறாதா! இனி என்ன செய்வது? அவன் மனம் குழம்பியது.

"நடராஜா! என்ன ஒரு மாதிரியாய் படுத்துவிட்டாய்? மார்வாடி என்ன சொன்னான்?" இப்படி அவன் தாய் கேட்டாள்.

நடராஜன் மௌனமாக இருந்தான். அவன் என்ன தான் பதில் சொல்ல முடியும்? அவன் மௌனத்தில் இருந்து பணம் கிடைக்கவில்லை என்று அவன் தாய் வள்ளியம்மாள் உணர்ந்துகொண்டாள்.

"என்னதான் மார்வாரி சொன்னான்?"

"நாம் கொடுக்கவேண்டியதே ரூபாய் ஐயாயிரத்துக்கு மேல் இருக்கிறதாம்!"

"பணத்திற்கு இனி என்ன செய்வது?"

"அதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்."

" நான் சொல்வதையாவது கேளேன். ஒரு நாலைஞ்சி வருஷம் சேகர் சம்பளத்திற்கு வேலை செய்யட்டுமே!"

நடராஜன் கண்கள் சிவந்தன. குப்பென்று வியர்த்தது; கோபத்தோடு தாயை விழித்துப் பார்த்தான்.

" அம்மா! சம்பளத்துக்கு வேலை செய்ய நான் சேகரை டாக்டராக்கவில்லை. சம்பளத்துக்கு வேலைக்குப் போக அவன் பத்தாவதுவரை படித்தாலே போதும்! ரூபாய் ஐயாயிரம் வரை செலவுசெய்து அவனை ஏன் படிக்கவைத்தேன்? என் தந்தையின் கனவு நனவாக வேண்டும்."

இப்படி ஆத்திரமாக கூறினான் நடராஜன்; ஆனாலும் அவன் தாய் நிதானத்தோடுதான் பேசினாள்.

" நடராஜா! நீ சொல்வது சரிதான். ஆனால்— பணம் இல்லாமல் உன் ஆசை எப்படி நிறைவேறும்"

" இந்த வீட்டை விற்றாகிலும் இந்த கிராமத்தில் ஆஸ்பத்திரி வைப்பேன். "

கொதிப்பாகவே இந்த பதிலை கொட்டினான் நடராஜன். ஆனால் அவன் தாயின் கண்கள் கலங்கின, நீர் சொரிந்தன.

பூர்வீக வீட்டையா? இதையும் இழந்து நடுத்தெருவில் நிற்கவா?

அழுதுகொண்டே வள்ளியம்மாள் கேட்டாள். தாயின் அழுகையை பார்த்தும் நடராஜன் மனம் இளகவில்லை.

" அம்மா! என்னை தனியேவிட்டு பேசாமல் செல்லுங்கள்."

"உம்! உன் இஷ்டப்படி செய், வீட்டுக்குப் பெரியவன் நீதான்."

அதற்கப்புறம் வள்ளியம்மாள் அங்கு நிற்கவில்லை. நடராஜனும் ஒரு இடத்தில் நிற்கவில்லை. அங்கும் இங்கும் சுழன்று அடிக்கும் காற்றுதானே புயல்? நடராஜன் மனம் புயலைப்போல இருந்ததினாலோ, என்னவோ அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தான்.

இதுவரைக்கும் தாயின் மனம் புண்பட நடராஜன் எதுவுமே பேசியது கிடையாது. ஆனால் இன்று? சற்று கடுமையாகவே பேசி விட்டான். இதை நடராஜன் நினைத்துப் பார்த்தான்; அவன் உடல் நடுங்கியது.

அப்போது அங்கே சேகர் மனைவி லீலா வந்தாள்; நடராஜன் காலடியில் ஒரு சிறு பொட்டணத்தை வைத்தாள். சிந்தனை லோகத்தில் இருந்த நடராஜன் லீலாவைக் கண்டதும், சிரிப்பை வரவழைத்தான்.

*"என்ன என்ன லீலா?"*

இப்படி அவன் வாய் உளறியது. அதற்குள் சிந்தனையில் இருந்து பூரண விடுதலை பெற்றான். லீலாவை அப்போதுதான் நன்கு பார்த்தான். அவள் தோற்றமே மாறியிருந்தது.

"லீலா! இது என்ன காட்சி? என் காலடியில் என்ன பொட்டணம்?"

ஆச்சரியமாகக் கேட்டான் நடராஜன், பொட்டணத்தைக் கையில் எடுத்தான்; அதில் பூராவும் தங்க நகைகள். *லீலா 'மூளி'யாக இருப்பதின் காரணத்தைத்* தெரிந்துகொண்டான்.

"லீலா ஏன் நகைகளை எல்லாம் கழற்றிவிட்டாய்?"

"ஒன்றுமில்லை, நீங்களும் மாமியும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். நீங்கள் வீட்டை விற்கவேண்டாம். என் நகைகளை விற்று ஆஸ்பத்திரி வையுங்கள்,"

உறுதியான இந்தப் பதிலை உள்ள மகிழ்வோடு லீலா கூறினாள். ஆகா இவளல்லவா பெண்— என்று மனதிலே எண்ணி மகிழ்ந்தான் நடராஜன். அதுமட்டுமா ?

"லீலா ! வீட்டை விற்பேன் என்று விளையாட்டாகத்தான் சொன்னேன். பணத்தைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம். நான் எப்படியும் ஏற்பாடு செய்து விடுவேன். நீ நகையெல்லாம் எடுத்து முன் போல போட்டுக்கொள்."

இப்படி நடராஜன் உறுதியாகக் கூற, லீலா அங்கிருந்து உள்ளே சென்றாள்.

## 15. என்ன காலமோ ?

அன்று இரவு மணி பதினொன்று இருக்கும். நிர்மலமாக இருந்த வானம் கூட அன்று மேகம் சூழ்ந்திருந்தது. சேகர் வான வெளியைப் பார்த்துக்கொண்டே பிடில் வாசித்துக்கொண்டிருந்தான்.

வானத்தில் மேகம் குமுறியதைப் போல சேகர் உள்ளத்திலே மோக வெறி அன்று தலைவிரித்தாடியது. அந்த இரவில், அந்த பிடிலின் கானந்தான் அவன் மனதிற்கு சாந்தி அளித்தது. என்னதான் சாந்தி இருந்தாலும் ஒரு பக்கம் சஞ்சலம் இருந்து கொண்டே அவனை வாட்டின.

கையிலே வெண்ணெ ; ஆனல் நெய்க்கு பஞ்சம் ; இந்த நிலை விசித்திரமில்லையா ? கல்யாணமாகியும் பிரம்

மச்சரியாக இருப்பதா? அடக்கமும் வெட்கமும் பெண்களுக்கு அவசியமாம்! கணவனிடத்திலே அவை இருக்க வேண்டுமா? இருக்கட்டுமே—அதற்கும் ஒரு அளவு வேண்டாமா?

இவை சேகர் உள்ளத்தின் எதிரொலி!

சூரியன் இருக்கிறனே அவன் அன்னியன்! அவனை பார்க்கும்போது கூச்சம் இருக்க வேண்டியது தான். ஆனால்—சந்திரனைப் பார்க்க கூச்சப்படுவதா? மலர் முகத்தைக் காட்டவேண்டிய லீலா ஏன் 'தொட்டால் சுருங்கியாக' காட்சி அளிக்கிருள்? உம்! சுத்தப் பட்டிக் காடு.

அந்த எதிரொலி அளித்த பதில்.

"லீலா!...என் காதல் கனியே!"

"அன்பரே! ...சென்னையில் இருக்கும்போது..."

"உன்னைத்தான் தினமும் நினைப்பேன், நீ ஆறு மாதத்திற்கு ஒரு தடவை எழுதுகிருயே கடிதம்—அதை எடுத்து திருப்பித் திருப்பி படிப்பேன்......முதல் முதலாக உன்னை முத்தமிட்டேன் பார்! அந்தக்காட்சியை என் கண் முன்னுல் நிறுத்தி அதைப் பார்த்துப் பார்த்து பூரித்துக்கொண்டே இருப்பேன். அதை நினைக்கும் போது . எவ்வளவு இன்பம் தெரியுமா? நான் இருக்கும் இடத்திற்கு நீ உள்ளே வந்தாய் வெட்கப்பட்டுக்கொண்டு தான் நின்ருய். ஆனுல் அடுத்த விநாடி? நம் இருவரின் உதடுகளும் ஒன்ருேடு ஒன்று இணைந்திருந்த காட்சிதான் எனக்கு நினைவிருக்கிறதே தவிர, நாம் ஆனந்த அணைப்பில் இருந்தது நினைவுக்கு வரவில்லை...சுகுமாரி! முதல் இரவு கூட உனக்கு மறந்திருக்கும்! எனக்குக்கூடத்தான் 'அந்த இரவு' மறந்த கனவாகவே போய்விட்டது.

ஆனுல் 'முதல் முத்தம்' இருக்கிறதே அது என் நெஞ்சை விட்டு அகலவே இல்லை.''

நான் தான் உன்னை இப்படி தினமும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனுல் நீ?...என்னை நினைப்பதே இல்லை. நான் சென்னையிலே இருந்தபோது......நீ ஏன் தினமும் லெட்டர் எழுதவில்லை? என் மீது உண்மை யான அன்பு இருந்தால்........என்னை இப்படி ஏங்க விடுவாயா?

''அன்பே! நான் உங்கள் மனைவி தான்! இருந் தாலும் பெண்! உங்களைப்போல் அடிக்கடி லெட்டர் எழுத முடியுமா? அல்லது உங்களைப்போல எனக்கு எழுதத் தெரியுமா? நான் அப்படி எழுதினுலும் அத்தை யும் மற்றவர்களும் என்ன நினைப்பார்கள்?......கடிதம் எழுதினுல் தானு காதல்? கடிதமில்லாத காலத்திலே வாழ்ந்த காதலர்கள் எல்லாம் எப்படி வாழ்ந்தார்கள்?

சுகுமாரா! முதல் முத்தமும் - ஏழாவது முத்தமும் எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. ஆம்!...அன்றைக்கு வீட்டிலே நான் தனியாக இருந்தேன், என் தந்தை அன்று எங்கோ போய்விட்டார். உங்கள் வரவுக்காக நான் காத்திருந்தேன்; வந்தீர்கள்; அப்போது.. நீங்கள் தந்த அந்த ஏழாவது முத்தம் இந்த உலகத்தையே மறக்க வைத்துவிட்டது.

எங்கிருந்தோ வந்த மேகம் சந்திரனை மறைத்து விட்டது. சேகர் மனதில் தோன்றிய இன்ப கற்பனை யையும் துன்பம் மறைத்தது. "சே! லீலாவை பற்றியா எவ்வளவு கற்பனை?'' இப்படி அடுத்து வேதனை தோன்றியது. மேகத்தில் இருந்து சந்திரன் விடுபட்டான். சேகர் தன் பாட்டை ஆரம்பித்தான்.

ஓ, வான்மதி !... ஓ வான்மதி !

எனது உயிர் உருகும் நிலை—

*செல்லுவாய் நீ — வான்மதி !*

சந்திரன் வானத்தில் இருந்து வேகமாக ஓடினான். லீலாவிடம் சொல்லப்போகிறானா? சேகர் பிடிலை மீட்டினான் ! மீட்டினான் ! நரம்புகள் அறுந்துவிடுமோ என்று அச்சப்படும்வரை மீட்டினான்.

"இது என்ன ! தூங்கவா வேண்டாமா ?"

"யார் ?... லீலாவா ? சந்திரன் உன்னை வந்து எழுப்பினானா ?"

பெருமூச்சின் கேள்வி இது !

"லீலா ! என் வேதனையை அறிந்து ஓடிவந்தாயா ?"

"இல்லை வேதனை பொறுக்க முடியாமல் வந்தேன்."

சிடுசிடுப்பு சிந்திய பதில்.

"உனக்குமா வேதனை ?...... லீலா ! என் கூடவே இரு, அந்த வேதனை தீர்ந்துவிடும்."

"எந்த நேரமும் இந்த பிடிலோடு அழுதுகொண்டிருந்தால்... வேதனை எப்படித் தீரும் ?"

"உம் ! சதா அழுதுகொண்டுதான் இருக்கிறேன். உன்னோடு பொழுதைக் கழிக்க வழியில்லையே என்று அழுதுகொண்டுதான் இருக்கிறேன்."

இது கண்கள் கக்கிய கண்ணீர்.

"இந்த பிடிலை முதலில் தூக்கி எறியுங்கள்."

ஆவேசத்தில் எய்த அம்பு !

"தூக்கி எறியவா ?...... உம் ! இந்த பிடிலுக்கு உள்ள உணர்ச்சிகூட உனக்கு இல்லை."

"சரி சரி! பேசாமல் போய்ப் படுங்கள். விடிந்தபின் பேசலாம்!"

தூக்கவெறி தூவிய விளிகள்!

"லீலா! நில், போகாதே. நீ ஒரு பெண்தானே? உனக்கு உள்ளம் இல்லையா? காதல் என்பதெல்லாம் உன்னைப் பொருத்த வரையில் கதைதானா?"

காமவெறி கக்கிய கடுஞ்சொல்!

"நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு புரியவில்லை, பேசாமல் போய்ப் படுங்கள்."

*லீலா நடந்தாள்;* நல்ல சமயம், நழுவ விடுவது அழகா? மேஜையில் பிடிலை வைத்துவிட்டு 'லீலா' என்று சொல்லிக்கொண்டே, அவளைப் பிடித்தான் சேகர்.

"ஐய்யய்யோ! யாராவது பார்த்தால்...... என்ன நினைப்பார்கள்?"

திமிறினாள்; சேகர் விடவில்லை.

"நினைக்கட்டும்; நீ என் மனைவி!"

"அதற்காக... விடுங்கள்! யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்."

எப்படியோ லீலா, சேகரின் பிடியில் இருந்து விடு பட்டாள்; ஓட ஆரம்பித்தாள். ஆனால்—

லீலாவின் சேலைபட்டு கீழே விழுந்த பிடில் உடைந்தது.

'படார்' என்று ஒரு அறை.

அடுத்த வினாடி லீலாவின் கன்னத்திலே விழுந்தது. அடுத்த அறை கொடுக்கப்போனான். ஆனால்—எதிர் பாராதவிதமாக அங்கு வந்த நடராஜன் சேகரின் கையை

பிடித்துக்கொண்டான். கண்ணீர் விட்டபடி லீலா அங்கிருந்து சென்றாள்.

"இப்படியா அடிப்பது உன் மனைவியை?" கோபத்தைக் கொட்டினான் நடராஜன்.

"மனைவி?... இவளா என் மனைவி? இல்லை. மரக் கட்டை! ஆத்திரத்தில் அள்ளி வீசினான் சேகர்."

"சேகர்!"

"அண்ணா! மரக்கட்டைக்காவது உணர்ச்சி உண்டு. இவளுக்கு அதுவும் கிடையாது."

"போதும்!...... இந்த உலகத்தில் லீலாவைப்போல உயர்ந்த குணம் உள்ள உத்தமியை நீ எங்கும் காண முடி-யாது." கொதிப்போடு கூறினான் நடராஜன்.

ஆமாம்! நீங்கள்தான் இவளை கட்டி அழவேண்டும்!

"நிறுத்துடா! லீலாவோடு வாழ பிரியமில்லாவிட்டால்... இந்த வீட்டைவிட்டு இப்போதே வெளியேறு."

முன்கோபம் முழக்கிய கர்ஜனை இது.

சேகர் மறுவார்த்தை பேசவில்லை. கதவைத் திறந்தான்; அவன் கால்கள் நடந்தன.

"ஐயோ! கூப்பிடுங்கள்! கூப்பிடுங்கள்!"

இப்படி முறையிட்டது லீலாவின் அழுகை.

"நடராஜா! கூப்பிடடா உன் தம்பியை!"

இப்படி தாங்கியது தாயின் பாசம்.

"முடியாது! அந்த மூர்க்கனை கூப்பிட முடியாது." முன்கோபம் மூட்டிவிட்ட புகை எரிய ஆரம்பித்தது.

"முடியாதா?... நடராஜா! சேகர் போய்விட்டால் என் ஆசைக் கனவு... ஆஸ்பத்திரி வைக்கும் லட்சியம் நிறைவேறுமா?"

இப்படிப் பேசிற்று செத்துப்போன தேவராஜரின் படம்!

"ஆம்!... மறந்துபோனேன்! சேகர்... சேகர்!"

பெரிய புயல்; 'விர்விர்' என்ற சப்தம். 'படார் படார்' என்று ஜன்னல் கதவுகள் மோதின. சுவரில் மாட்டப்பட்டிருந்த சேகர் படம் கீழே விழுந்து உடைந்தது.

"ஐயோ, சுவாமி!" என்று அலறிக்கொண்டே படத்தைக் கையில் எடுத்தாள் லீலா!

"தம்பி! தம்பி!"—என்று கதறிக்கொண்டே நடராஜன் வெளியே ஓடிவந்தான். காற்றிலே ஒடிந்த பெரிய மரக்கிளை நடராஜன் தலையிலே விழுந்தது. "அம்மா" என்று கீழே விழுந்தான்.

குமார் ஓடிப்போய் தூக்கினன். நடராஜன் மண்டையில் இரத்தம் பீறிட்டு வந்தது. நடராஜன் மனைவி பார்வதியும் 'ஓ' வென அழ ஆரம்பித்தாள்.

"இது என்ன காலமோ?"—என்று சொல்லி வள்ளியம்மாளும் அழுதுகொண்டிருந்தாள்.

அப்போது லீலா வீட்டில் இருந்து ஒருவன் ஓடிவந்தான். "அம்மா! அம்மா! லீலாவின் தகப்பனர் மாரடைப்பால் திடீரென்று இறந்துபோனர்" என்று செய்தியை அறிவித்தான்.

"ஐயோ அப்பா! என்னை இந்த நிலையிலா விட்டுச் செல்கிறீர்கள்?"

அணைபோட முடியாத துக்கத்தால் லீலா அழுதாள். ஒருபக்கம் பிரிந்து செல்லும் கணவன்; மறுபக்கம் தகப்பன்! என்ன செய்வது?

எல்லோரும் உடனே லீலா வீட்டுக்குச் சென்றனர் துக்கம் விசாரிக்க.

## 16. உனை பிரியேன்!

அந்த நள்ளிரவில் கால்கள் சென்ற பக்கம் நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான் சேகர். விருதுநகர் ரயில்வே ஸ்டேஷனில் வந்து தான் அவன் கால்கள் நின்றன. விழித்துப் பார்த்தான் இரவு மணி மூன்று.

"ஏதாவது வண்டியிருக்கிறதா?" வழிப்போக்கர்களிடம் அவன் கேட்டான்.

"*மூணரை மணிக்கு மதுரைக்கு ஒரு வண்டி.*"

இந்தப் பதிலைக் கேட்டதும், பாக்கெட்டில் கையை விட்டு பணத்தை எடுத்தான்; ஒரு டிக்கட் வாங்கி ரயிலில் ஏறினன்.

அந்தப் பக்கம் வந்த போலீஸ்காரன் சேகரை முறைத்துப் பார்த்தான்; நெருங்கி வந்தான்.

"அடே யார் நீ? டிக்கட் இருக்கா?"

அரட்டிக் கேட்டான் போலீஸ்காரன். அவன் தான் என்ன செய்ய முடியும்! 'பிக்பாக்கட்' அடிக்கும் பேர்வழிபோல சேகர் காட்சி அளித்தான்; பேந்தப் பேந்த விழித்துக்கொண்டும் இருந்தான். நல்ல வேளை போலீஸ்காரனுக்கு இங்கிலீஷில் பதில் சொன்னன் சேகர்!

இல்லாவிட்டால்......61-வது பிரிவுப்படி 'சந்தேக கேஸ்' போட்டு, சேகரை ஜெயிலில் அடைத்திருக்கலாம் அந்த போலீஸ்காரன்! சேகரை மட்டுமென்ன போலீஸ்காரன் நினைத்தால் யாரையும் 'சந்தேக கேஸ்' என்பதின் பேரில் சிறையில் அடைத்து விடலாம்! ஜாமீன் எடுக்க ஆள் வருகிற வரைக்கும் யாரும் மீண்டுவிட முடியாது. அது வரைக்கும் 'ஜெயில் கஞ்சி' சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அந்த 'எமவாரண்ட்' சட்டத்திலிருந்து

சேகர் அதிர்ஷ்ட வசமாக தப்பினுன் என்று தான் சொல்ல வேண்டும்.

பத்திரமாக திருமங்கலம் வந்து சேர்ந்தான். ஸ்டேஷனுக்கு வெளியே நடந்தான்.

"நளினு வீடு எங்கே?"

"விசாரிக்கலாமா?"

"வேண்டாம்! வேண்டாம்! பிச்சைக்காரத் தோற்றத்தில் இருந்து கொண்டு... பிரபுத்வ நளினுவை விசாரிக்க வேண்டாம்!"

"அப்புறம் வேறு வழி!"

"ஆம்! ஒன்றுமில்லை! விசாரிக்கவேண்டியதுதான்."

இந்த மனப் போராட்டத்திற்கு பின் நளினு வீட்டை சேகர் கண்டுபிடித்து விட்டான். ஆனுல்—

"உள்ளே போகவா?"

"போவதற்குத்தானே வீட்டை கண்டுபிடித்தோம்."

"வேறு யாராவது உள்ளே இருந்தால்...?"

"கள்ளமுள்ளவனுக்கல்லவா அந்த பயம்?"

"உண்மைதான்! நளினு என் சிநேகிதை செல்லத் தான் வேண்டும்."

முன் பின் யோசியாதபடி மட மடவென்று உள்ளே நுழைந்தான் சேகர்.

"ஏ! ஏ! யார் நீ? பிச்சைக்காரன் மாதிரி இருக்க திறந்த வீட்டில் நாய் மாதிரி..."

இந்தப் பேச்சை சேகர் எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வது? துடுக்குத்தனமான வேலைக்காரி அப்படி பேசிவிட்டாள்.

"அங்கே என்ன சப்தம்?"

இப்படி கேட்டுக்கொண்டே நளினு உள்ளே இருந்து ஹாலை நோக்கி வந்தாள் !

"சீ ! பிச்சைக்காரன் என்று ஒரு வேலைக்காரி கேட்டபின் நிற்பதா ? நளினுவும் வேண்டாம், அவள் நட்பும் வேண்டாம் !"

வீதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான் சேகர். தன் ஏழ்மை முகத்தை நளினுவுக்குக் காட்ட அவன் பிரியப் படவில்லை.

"எவனே தெரியல்லம்மா ! மடமடன்னு உள்ளே வர்ருன் ! இப்படிப்பட்டவன் நாம் அசந்தா திருடிக் கிட்டே போயிடுவான்."

நளினுவின் கேள்விக்கு வேலைக்காரியின் விளக்கமான இரண்டாவது பதில்.

"திருடன் ! திருடன் !"

"அழையா வீட்டில் நுழைந்தாய் அல்லவா ? உனக்கு பரிசுடா ! பரிசு ! போ ! நிற்காதே ! சென்றுவிடு !

மனப் புயலால் தள்ளப்பட்ட சேகர் வேகமாக அடி எடுத்து வைத்தான்.

"நில் !...நடக்காதே ! அப்படியே நில் !"

போலீஸ்காரன் சப்தத்திலே கூட இவ்வளவு கடுமை இல்லை ; ஆனுல் குயில் மொழி பேசும் நளினுவின் குரலில் ...பயங்கரம் தொனித்தது. அசையாமல் நின்ருன் சேகர்.

"யார் நீ ! எதற்காக வந்தாய் ?"

சேகர் அசையவில்லை.

"என்ன நான் கேட்கிறேன். நீ நிற்கிருயே !"

இப்படிக் கூறிக்கொண்டே நளினி அவனுக்கு முன்னால் சென்றாள். சேகர் பேசவில்லை; அவன் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள்தான் பேசின!

"உன்மேல் குற்றமில்லை நளினி! நான் வந்திருக்கக் கூடாது."

"இல்லை. வரவேண்டும்; வருகிறேன் என்று அறிவித்திருக்க வேண்டும். இரயிலடிக்கு வந்து நான் வரவேற்றிருக்கவேண்டும்."

பதில் சொல்ல சேகர் வாயைத் திறந்தான்; ஆனால் நளினி பேச விடவில்லை. உள்ளே அழைத்துச் சென்றாள்; குளிக்கச் செய்தாள்; நாகரீகமாக அலங்கரிக்கச் செய்தாள்; வெகுண்டு பேசிய வேலைக்காரி, சுருண்டு ஒடுங்கி காலைப் பலகாரத்தை இருவருக்கும் பரிமாறினாள். சாப்பிட்ட பின் இருவரும் சோபாவிலே உட்கார்ந்தார்கள்.

"ஆமாம் தங்களின் இந்த நிலைக்குக் காரணம்!"

"நான் தான் அநாதை என்று முன்னமே சொன்னேனே."

புத்திசாலித்தனமாக பொய் சொன்னான் சேகர்.

"உங்கள் தாய் தந்தையின் வரலாறுதான் என்ன?

"நான் தவழும் பருவத்திலேயே பரலோகம் போய் விட்டார்கள்."

இந்தப் பொய்யைக் கூறும்போது சேகர் கண்கள் கலங்கின; இதை நளினி கண்டு விட்டாள்; மேற்கொண்டு எதுவும் கேள்வி கேட்க அவள் விரும்பவில்லை.

"சேகர்! இனி நீங்கள் எங்கும் போகக் கூடாது. இங்கேயே இருக்க வேண்டும். நமது கனவு நனவாகும் காலம் வந்து விட்டது."

இதற்கு பதில் சொல்லவில்லை; பதுமைப் போல் அசையாதிருந்தான். "ஐயோ! பெற்ற தாய் கூட செத்து விட்டாள்!" என்று ஈனத்தனமாகப் பொய் சொல்லி விட்டேனே, என்று அவன் மனதில் வேதனைத் தீ பற்றி எரிந்து கொண்டிருந்தது.

ஆனால்?

அதே நேரத்தில் லீலாவின் தந்தை, ஆம்—சேகரின் மாமனார், பாலைவன மயானத்தில் எரிந்துகொண்டிருந்தார்.

## 17. அலை மோதுதே!

லீலாவின் அழுகை அன்றோடு நின்றுவிடவில்லை; அவள் அழுகை ஓர் தொடர் கதையாக மாறியது. தொடர் கதையிலே பல சம்பவங்கள் வருமல்லவா? அதைப் போலவே ஒரு நாள் தந்தைக்காகவும், இன்னொரு நாள் தாய்க்காகவும், தன் நிலைக்காகவும் அழுவாள்; ஆனால் இரவெல்லாம் சேகருக்காக அழுவாள்.

லீலாவின் முகத்திலே சதா சோக மேகம் குடிகொண்டிருந்தது; தன்னுடைய வருத்தம் மற்றவர்களுக்குத் தெரியாதபடி மறைப்பதற்கு எவ்வளவோ முயற்சித்தாள். நெருப்பை துணிக்குள்ளே மறைத்தால், துணி எரியும் புகை தெரியுமல்லவா? அதைப் போலவே லீலாவின் முகத்திலே அவளின் உள்ளக் குமுறல் அப்படியே பிரதிபலித்தது.

இந்தக் காட்சியைக் காணச் சகிக்காத வள்ளியம்மாள் மருமகளுக்கு எவ்வளவோ ஆறுதல் சொன்னாள். வயிற்றுப் பசிக்கு பழைய கஞ்சி வேண்டுமானால் ஓரளவு ஆறுதல் தரலாம். வெறும் வார்த்தைகள் ஆறுதல்

தருமா? கணவனை பிரிந்த லீலாவுக்கு 'கவலைப்படாதே' என்ற வார்த்தைகள் ஆறுதல் அளிக்குமா? கண்ணீர் விட்டுக்கொண்டே தான் இருந்தாள் லீலா.

"நடராஜா! நம்ப சேகரை எப்படியாவது தேடி அழைத்து வா!"

இது தாய் பாசத்தின் வேண்டுகோள்.

"பேசாமல் இருங்கள் போனவன் திரும்பிவருவான்."

முன் கோபத்தின் முடிவான பதில்.

பாவம்! வள்ளியம்மாள் என்ன செய்ய முடியும்? பல தடவை நடராஜனிடம் சொல்லிப் பார்த்தாள். ஒரே பிடிவாதமாக நடராஜன் மறுத்து விட்டான். ஆனால் சேகர் சென்றதிலிருந்து நடராஜனும் நடைப் பிணமாக வே வாழ்ந்து வந்தான்.

நாடார் குடும்பத்தில் ஒருவன் குறைந்தது வானத்தில் மேகங்களுக்கிடையே அரைகுறை சந்திரன் பிரகாசிப்பது போலவே தோற்றமளித்தது. பௌர்ணமி வராமலா போகும்? இந்த எண்ணத்தில் நாட்கள் கடந்து கொண் டிருந்தன.

ஆனால்—லீலா நாளுக்கு நாள் கவலையால் தேய்ந்து மெலிந்து கொண்டே வந்தாள். இதை புரிந்து கொண்ட நடராஜன், லீலாவுக்கு ஆறுதல் அளிக்கப் புத்தகங்கள் படிக்க ஏற்பாடு செய்ய நினைத்தான். விருதுநகர் முனி சிபல் லைப்ரரியில் மூன்று ரூபாய் கட்டி தான் ஒரு அங்கத் தினராகச் சேர்ந்தான்; தேவையானப் புத்தகங்களைப் படிக்க வசதியும், தேவையில்லாதபோது பணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளவும் அங்கு ஒரு வாய்ப்பு இருந்தது. நிறைய நாவல்களை லீலா படிக்க நடராஜன் ஏற்பாடு செய்தான்.

நாவலில் வருகிற பல சம்பவங்கள் தன் வாழ்க்கையில் நடந்ததாக இருக்கக்கண்டாள். கஷ்டப்படுகிற கதாபாத்திரங்களெல்லாம், தான் என்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டதால், புத்தகப் படிப்பில் அவளுக்கு புது வேதனைதான் தோன்றியது.

ஆனால்—மராட்டிய அறிஞன் காண்டேகர் எழுதிய சில புத்தகங்களை லீலா படித்துப் பல உண்மைகளை உணர்ந்தாள்.

"குழந்தைகள் பொம்மைகளோடு சதா விளையாடுவதைப்போல என் கணவர் என்னோடு...... நான் என்ன மரக்கட்டையா ?"

இதிலே யார் குற்றவாளி ? கணவனா, மனைவியா ? அல்லது அவ்விருவரையும் புருஷன் மனைவியாக்கிய சமூகமா ? கட்டுக்கடங்காத கணவன் கதி என்ன ?

இந்தக் கணவரின் ரகத்தைச் சேர்ந்தவரா என் சேகர் ?...இல்லை ! இல்லை ! பல மாதங்களுக்குப்பின்—ஏன், வருடங்களுக்குப்பின், என் பக்கத்திலே வந்தார். தழுவும் கொடியாக இருக்கவேண்டிய நான், பாழாய்ப் போன வெட்கத்தால், படர மறுத்தேன் ; அறுபட்டு நிற்கிறேன்.

காண்டேகரின் சிறு தீப்பொறி லீலாவின் அறிவுக் கண் இமையை சிறிது திறக்கவைத்தது.

இன்னொரு ஆசிரியரின் புத்தகத்தைப் புரட்டினாள் லீலா.

"கனகமணி கட்டிலிலே, கரிய கூந்தலை விரித்துப் போட்டு, கலங்கிய கண்களோடு காதலன் வரவுக்காக காத்திருக்கிறாள் காதலி !—என்றெல்லாம் கற்பனை உலக

காதலிகளைப்பற்றி வரைந்து தள்ளுகிறீர்களே, உண்மை யில் நீங்கள் எழுதுகிற மேஜைக்குப் பக்கத்திலே, பெரு மூச்சோடு உறங்குகின்ற உங்கள் மனைவியின் உள்ளத்தை நீங்கள் உணர்ந்ததுண்டா ?''

ஐயோ ! என் சேகர் உள்ளத்தை நான்தான் உணர வில்லை. அந்த பெருமூச்சு, கலங்கிய கண்கள் விம்மும் இதயம், ஏக்கம், துக்கம் ஆகிய அனைத்தும் அன்று இருந்ததில்லை. இன்று இருக்கிறது. அன்று தூக்கம் இருந்தது; ஆனால் இன்று ? அழுகிறேன்; அழுது கொண்டிருக்கிறேன்.

இப்படிப் புலம்பினாள் லீலா; புத்தகப் படிப்பின் பயனாக புதுப்புதுக் கனவுகள் கண்டாள். வண்ணமலர் வாடிக்கொண்டே வந்தது; புதுமைப் புஷ்பம் பொசுங் கிக்கொண்டே வந்தது.

இந்தக் காட்சிகளைக் கண்ட வள்ளியம்மாள் படுக்கை யிலே படுத்தாள்; காய்ச்சல் அவளைக் கட்டிப்பிடித்தது; இருமலும் இடைவிடாது அவளை வாட்டியது.

'' சேகர்! சேகர்! ''

இந்த சோகக்குரல் ஈனஸ்வரத்தில் அடிக்கடி எழுந் தது. நடராஜன் ஏதோ நாட்டு வைத்தியம் செய்தானே தவிர சேகரை தேடவேண்டுமே என்று அவன் மனது நாடவில்லை. அதற்குக் காரணம் அவன் பைத்தியம் போல் காட்சியளித்தான்.

'' ஆஸ்பத்திரி! ஆஸ்பத்திரி ! ''

இது நடராஜனின் அன்றாட புலம்பல்!

## 18. என் எண்ணம்போலே!

நளினவுக்கும் ஆஸ்பத்திரி வைக்க வேண்டும் என்ற ஆசை அதிகமாக இருந்தது. சம்பளத்திற்கு வேலை செய்யும் சர்க்கார் உத்தியோகமும், பிற டாக்டர்களின் உத்திரவுப்படி ஊழியம் செய்யவும் நளினவுக்கு ஆரம் பத்திலிருந்தே சுத்தமாகப் பிடிக்கவில்லை.

ஆஸ்தி நிறைய இருப்பதால் ஆஸ்பத்திரி எப்படியும் வைக்க முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. அதோடு ஆதரவுக்கு சேகர் இருப்பதை அறிந்து ஆண், பெண் இரு பாலர்களுக்கும் சேவை செய்து, ஆஸ்பத் திரியை திறம்பட நடத்த முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

பரீட்சையிலும் இருவரும் முதல் தரமாகத் தேறி டாக்டர் பட்டமும் பெற்றனர். அந்தத் தொழிலுக்குரிய பயிர்ச்சியும் இருவர் சேர்ந்தே பெற்றனர். இருவருக்கும் வெளியில் நல்ல கிராக்கிகள் மோதின.

அதில் ஏதாவது ஒரு வேலையைத் தான் போய்ப் பார்ப்பதாக நளினவிடம் கூறினன் சேகர். அதற்கு நளின சம்மதிக்காமல் இருவரும் சேர்ந்து ஒரு ஆஸ்பத்திரி நடத்தலாம் என்று யோசனை கூறினள். அதை சேகர் ஒப்புக்கொண்டதும், எந்த ஊரில் ஆஸ்பத்திரி திறக்க ஏற்பாடு செய்யலாம் என்ற பிரச்னை கிளம்பியது.

ஏதாவது ஒரு கிராமத்திலே ஆஸ்பத்திரி வைக்கலாம் என்று நளின யோசனை சொன்னள்.

அதை சேகர் ஒத்துக்கொள்ளவில்லை. பலமாக ஆட்சேபித்தான். நியாயமான சில காரணங்கள் கூறி அதுமட்டுமல்ல, திருமங்கலத்திலேயே அதற்குத் தக்க

ஏற்பாடு செய்யலாம் என்று சேகர் சொன்னான்; அதை ஏனோ நளினா மறுத்து விட்டாள்.

மதுரையில் என்று சேகர் ஆலோசனையைக் கூட நளினா மறுத்துவிட்டு, விருதுநகரில் திறக்கலாம் என்று கூறினாள். அது சேகருக்கு பிடிக்கவில்லை. என்றாலும் கடைசியில் ஒப்புக்கொண்டான்.

அதன் பின் இருவரும் விருதுநகர் சென்று, வசதி யான இடங்களை வாடகை பேசி முடித்துவிட்டு, சாமான் வகைகள் வாங்க சென்னை சென்றனர். பதினைந்து நாட்களில் எல்லா வேலைகளும் பூர்த்தியாயின.

திறப்பு விழா அழைப்பிதழ் அச்சிடப்பட்டது. அந்த அழைப்பிதழ் நளினா பெயரில் இருந்ததே தவிர சேகர் பெயரில் இல்லை. அதற்குக் காரணம் சேகரின் கண்டிப்பான பேச்சு தான்.

வியாதிக்கும் பிரமுகர்களுக்கும் விசேஷமான தொடர்பு இருக்குமோ என்னவோ, அச்சிடப்பட்ட அழைப்பிதழ்கள் பிரமுகர்களுக்கு மட்டும் அனுப்பப் பட்டன! திறப்பு விழா வைபவமும் இனிது நடந் தேறியது.

டாக்டர்களிடத்திலே கோபம், சிடுசிடுப்பு கொஞ்சங் கூட இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் வியாதியஸ் தர்கள் வரவே பயப்படுவார்கள். நளினாவும், சேகரும் ஒவ்வொருவரையும் நன்கு உபசரித்தார்கள். குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களுக்கு வைத்தியம் செய்வதை நளினா மேற்கொண்டாள்.

சில டாக்டர்களுக்கு இரவு நேரங்களிலே வெளி வருவதென்றால் இமயமலையில் ஏறுவதுபோல் நினைப்

பார்கள். ஆனால் இருவரிடத்திலும் அந்தக் குணம் இல்லாததால், ஆஸ்பத்திரி நல்ல வருமானத்தோடு நடக்க ஆரம்பித்தது.

ஒரு நாள் நடராஜனும், வள்ளியம்மாளும் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். உதவிக்கு லீலாவும் உடன் வந்திருந்தாள். வள்ளியம்மாள் மிகவும் மெலிந்து காணப் பட்டாள். விருதுநகர் புது ஆஸ்பத்திரியில் நல்ல மருந்து கொடுப்பதாக சுற்றியுள்ள கிராமம் பூராவும் செய்தி பரவி இருந்தது. அதைக் கேட்ட பின்பே நடராஜன் தன் தாயாரை அழைத்து வந்தான். தன் அருமைத் தம்பி சேகர் அங்கு இருப்பதாக அவனுக்கு தெரியவே தெரியாது.

வள்ளியம்மாளை உள்ளே அழைத்துச் சென்றான் நட ராஜன். சேகர் இருக்கிற பக்கமே கூட்டிச் சென்றான்; லீலாவும் கூடச் சென்றாள். எதிரே வந்த நர்ஸ் அவர்களை தடுத்து நிறுத்தி, 'பெண்களுக்கு இந்தப் பக்கமல்ல'— என்று கூறி வேறு பக்கம் அழைத்துச் சென்றாள், வழக் கம்போல் நளினி நன்கு கவனித்து அனுப்பி வைத்தாள்.

இப்படியே நோயாளிகள் பெருகினர்; பணமும் பெருகியது, சொந்த இடங்கள் சில நளினி வாங்கினாள்,

ஓய்ந்த நேரத்தில் சேகர் மருந்துகளை ஆராய்ச்சி செய் வதிலே ஈடுபட்டான். பெரும் நோய்களை தடுப்பதற்கு சிறந்த மருந்துகளை தயாரிப்பது அவன் லட்சியமாக இருந்தது. முயன்றால் முடியாதது ஒன்று உண்டா? பார்வை இழந்த கண்களுக்கு ஜீவசக்தி அளிக்கும் அற்புத மருந்து ஒன்று கண்டு பிடித்தான்; அதை அரசாங்கம் பல பரீட்சைக்குப் பின் அங்கீகரித்ததோடு, சேகருக்குக் கௌரவப் பட்டமும் சூட்டியது. மாகாணத்தில் உள்ள

பிரபல டாக்டர்கள் எல்லாம் சேகரைப் புகழ்ந்தார்கள். சேகருக்கு வந்த பெருமை தனக்கு வந்ததாக நினைத்து மகிழ்ந்தாள் நளினி.

அந்தக் கண் மருந்து நளினியையும், சேகரையும் லட்சாதிபதிகளாக்கியது. பங்களா வாசிகளாக்கியது. கார்கள் வைத்திருக்கும் கனவான்களாக்கியது. ஆனால்—

## 19. பிள்ளையோ பிள்ளை!

வள்ளியம்மாள், நடராஜன், குமார், மாணிக்கம் ஆகியவர்கள் வாழ்க்கையில், நாளுக்கு நாள் வறுமையின் வேகம் அதிகரித்ததே தவிர, வேறு எந்த முன்னேற்றமும் இருக்கவில்லை.

வள்ளியம்மாளும், லீலாவும் ஒருவர் மாறி ஒருவர் படுக்கையிலே படுப்பதும், எழுந்து நடமாடுவதுமாக இருந்தனர். வருமானத்தின் கால் பாகத்தை வைத்திய செலவு மாதா மாதம் விழுங்கிக்கொண்டு வந்தது.

நடராஜன் பேய் பிடித்தவனைப்போல எந்த நேரமும் 'மௌனி'யாக காட்சியளித்தான். லீலாவும், தன் தாயாரும் படும் வேதனை அவனை மேலும் பைத்தியமாக்கியது.

இளையவனான மாணிக்கம் ஒருவன்தான் துள்ளிக் குதித்தாடும் பள்ளி வாழ்க்கையிலே மிதந்துகொண்டிருந்தான். அதுவும் விருதுநகர் பள்ளிக்கூடத்திலே சம்பளம் இல்லாதிருந்ததினால்தான் அந்த பாதையில் தடைக் கல்லாக ஒன்றும் இருக்க முடியவில்லை.

குமார் சிறிய பலசரக்குக் கடையைக் கட்டிக் கொண்டு தினமும் மாரடித்தான் ரூபாய்க்கு இரண்டணா கூட கிடைப்பது கஷ்டம். அதிலும் கிராமத்தில்

பெரும்பாலோர் கடன் வாங்கும் கர்ண பரம்பரையைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். எந்த சாமான் கடையில் இல்லை என்பதை அறிந்து உடனுக்குடன் வாங்கி விற்க வேண்டிய வேலை குமாருக்கு இருந்தது. தன் ஒன்னரை வயது மகனை தேவராஜனின் மழலைப் பேச்சைக் கேட்கக்கூட அவனுக்கு நேரமில்லை.

அன்று குமாருக்கு இருபது ரூபாய் அவசரமாகத் தேவைப்பட்டது. கடன் புள்ளிகளை தேடிக்கொண்டிருந்தால் கடையை மூடிவிட நேரும் என்பதை குமார் உணர்ந்தான். மேல்கொண்டு சாமான்கள் வாங்கி வைக்க ரூபாய் இருபது குறைவாக இருந்தது.

"அண்ணா! இருபது ரூபாய் இருந்தால் கொடுங்கள். அவசரமாகத் தேவைப்படுகிறது."

இப்படி நடராஜனிடம் குமார் கேட்டதும் 'இதோ தருகிறேன்'—என்று சொல்லிவிட்டு, பணத்தைக் கொண்டுவந்துதர உள்ளே சென்றான் அப்போது அவன் மனைவி பார்வதி அங்கே வந்தாள்.

"எதற்காக பணத்தை எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்?"

"தம்பி குமாருக்கு இருபது ரூபாய் வேண்டுமாம்!"

"ஆமாம்! உங்களுக்கு வேறு வேலை இல்லை. இப்படியே கொடுத்துக்கொண்டிருந்தால் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான்........பணம் இல்லை என்று சொல்லி விடுங்கள்."

கோபமாக கூறிய பார்வதி நடராஜனிடமிருந்து பணப்பையை பறித்து, பெட்டியினுள் போட்டு பூட்டி சாவியை கையில் வைத்துக்கொண்டாள்.

தன் குடும்ப நிலையை எண்ணி, மனம் கொந்தளித்து, பேதளித்து இருந்த நடராஜன் மௌனமாக பிணம்போல நடந்தான். ஆவலோடு எதிரே வந்தான் குமார்.

" அண்ணு ! பணம் தருகிறீர்களா ? "

குமாரின் கேள்வி, குத்தூசியால் குடலில் குத்தியது போல் இருந்தது. நடராஜன் என்ன சொல்வது என்று கலங்கினன்.

" தம்பி ! கைவசம் பணம் இல்லை ! "

இந்தப் பொய்யை நடராஜன் எப்படியோ சொல்லி விட்டான் ; தலைமேல் பெரிய சுமையாக மலைபோன்ற ஒரு பொருள் இருந்தது அதை கீழே இறக்கிவிட்டால் எப்படி இருக்குமோ அப்படி காட்சி அளித்தான் நடராஜன், தம்பியை சமாதானப்படுத்தி அனுப்பிய உடன்.

பணத்திற்கு என்ன செய்வதோ என்ற வேதனை யோடு குமார் அங்கிருந்து சென்றுன். குமாரின் குழந்தை தேவராஜன் " அப்பா " என்று சொல்லிக்கொண்டே, பெட்டி இருந்த அறைக்கு வந்தான். அப்பாவை காணு மல் அங்கேயே விளையாட ஆரம்பித்தான்.

பெட்டி பூட்டை பிடித்து தேவராஜன் ஆட்டினுன். அது சரியாக பூட்டப்படாததால் திறந்துகொண்டது. பெட்டி திறக்கப்பட்டது, அந்த பணப்பை குழந்தையின் கைக்கு வந்தது, அதை கையில் வைத்துக்கொண்டே தேவராஜன் விளையாடிக்கொண்டு அறைக்கு வெளியே வந்தான்.

அந்தப் பணப்பையை கீழே போடுவதும் எடுப்பது மாக சிரித்து ஆடிக்கொண்டே இருந்தான் குழந்தை தேவராஜன். வீட்டின் ஓரத்திலே சென்றுகொண்டி

ருந்த சாக்கடையிலே அந்தப் பணப்பை விழுந்தது; விழுந்துவிட்டதே என்று அந்தப் பையன் அழுது கொண்டே நின்றான்.

"ஏண்டா கண்ணு அழுகிறாய்"—என்று கேட்டுக் கொண்டே தாய் அங்கே வர, பையன் சாக்கடையை காட்டி கையை நீட்டினான்; லட்சுமி உள்ளே பார்த்தாள். அழுக்கு தண்ணீர் தெரிந்ததே தவிர வேறு எதுவும் காணப்படவில்லை; ஆனாலும் பையன் அழுதுகொண்டே இருந்தான். ஏதோ விழுந்திருக்கவேண்டும் என்று கருதிய லட்சுமி, காலைவிட்டுப் பார்க்கலாமே என்று கீழே இறங்கினாள்; ஆனால் அப்போது வந்த குமார்—"ஏன் சாக்கடையில் காலைவிடப் போகிறாய்"—என்று கூறி தடுத்துவிட்டான்.

குழந்தை மேலும் அழுதது. பணத்திற்கு என்ன செய்வது என்று வேதனைப் பட்டுக்கொண்டிருந்த குமாருக்கு கோபம் வந்தது; குழந்தையை அடித்தான். "பிள்ளை இல்லாமல் சிலர் வேதனைப்படுகிறார்கள், நீங்கள் இப்படி அடிக்கிறீர்களே"—என்று லட்சுமி குழந்தையை வாரி முத்தமிட்டாள்.

இதைக்கண்ட நடராஜன் மனைவி பார்வதிக்கு. குழந்தையில்லையே என்ற வருத்தமும், பொறாமையும் ஏற்பட்டது. தனக்கு குழந்தை இல்லாததை நினைத்து கவலைப்பட்டாள்.

## 20. மற்றொரு பிரிவு!

இதேசமயத்தில் விருதுநகரிலே ஒரு 'வெற்றிலை சாமியார்' ஒருவன் வந்திருந்தான். அவன் தாம்பூல எச்சிலை எந்தப்பெண் குடித்தாலும் கருதரித்துவிடுவார்கள் என்ற கட்டுக்கதை மக்களிடம் பரவி இருந்தது.

பிள்ளை ஆசைகொண்ட பார்வதி இந்த சாமியாரைக் காண விருதுநகர் வந்தாள்; அதற்குள் அந்த சாமியாரை பித்தலாட்டக்காரன் என்று உணர்ந்துகொண்ட விருதை மக்கள், பாதுகா பட்டாபிஷேகம் செய்து விரட்டிவிட்ட தாகக் கேள்விப்பட்டாள். அவளுக்கு மிகவும் வருத்த மாய் இருந்தது.

ஆனல்—ஆறுதல் ஏற்படுகிறப்போல, அருப்புக் கோட்டையிலே ஒரு மந்திரவாதி இருப்பதாகவும், அவ னிடம் போன உடனே எதற்காக வந்திருக்கிறேமென்று சொல்லிவிடுகிறன் என்றும் பார்வதி கேள்விப்பட்டு அருப்புக்கோட்டை சென்றுள்.

முப்பது ரூபாய் கொண்டுவாருங்கள் ஒரு 'தாயத்து செய்து தருகிறேன்: அதை போட்டுக்கொண்டால் அடுத்த மாதமே கர்ப்பமாவீர்கள் என்றுன் மந்திரவாதி. பார்வதிக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை.

வீட்டுக்கு ஓடோடி வந்தாள்; பணம் எடுக்க பெட்டி அருகே விரைந்து சென்றுள்; ஆனல் திகைத்து நின்றுள். பணப்பையைக் காணேம் என்றதும்.

இதில் இருந்த பணப்பை எங்கே? தன் கணவரே எடுத்திருப்பாரா, தன் தம்பிக்கு கொடுக்க? அவ்வளவு தூரத்திற்கு ஆளாகிவிட்டாரா?

பார்வதி பத்ரகாளியாகி விட்டாள்! வேகமாக வந்தாள்; கன்னத்திலே கை வைத்துக்கொண்டு கணவன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

"எனக்கு தெரியாமல் இப்படி பணத்தை எடுக்க எத்தனை நாள் காத்திருந்தீர்கள்?"

பார்வதியின் இந்தக் கேள்வியைக் கேட்டதும் நடராஜன் திடுக்கிட்டான்.

"என்ன உளறுகிறாய்?"

"உளறவுமில்லை; கிளறவுமில்லை! பெட்டியில் இருந்த பணம் எங்கே?"

"நீதானே பெட்டியை பூட்டி சாவியை வைத்திருந்தாய்?"

"பூட்டை உடைத்துத்தான் எடுத்திருக்க வேண்டும்."

"வீணாகப் புலம்பாதே! போய்த் தேடிப்பார்!"

"நீங்க எடுக்கவில்லையா? அப்ப சரிதான், ஒரு வீட்டுக்குள்ளேயே திருட்டு நடக்க ஆரம்பிச்சிட்டது! இந்த திருட்டை கண்டுபிடிக்காமல் விடமாட்டேன்."

ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள் பார்வதி. நடராஜனால் சகிக்க முடியவில்லை. "கத்தாமல் உள்ளே போடி, எல்லாவற்றையும் கவனிக்கலாம்"—என்று சொல்லி பார்வதியை உள்ளே அனுப்பினான் நடராஜன். கவலை மேலும், மேலும் சூழ்ந்தது.

"அண்ணா சாப்பிடப் போகலாமே!"

என்று சொல்லிக்கொண்டே நடராஜனின் தம்பி குமார் அங்கே வந்தான். நடராஜன் ஒன்றும் பேசாமல் அவன் பின்னாலேயே புறப்பட்டான்; இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர்; குமாரின் மனைவி லட்சுமியே இருவருக்கும் பறிமாறினாள். நடராஜனும் குமாரும் சாப்பிட கையிலே சாதத்தை எடுத்தார்கள்; வாயை நோக்கி கை சென்றது; அப்போது அங்கே பார்வதி வந்தாள்!

"யாராயிருந்தாலும் சரி! பணத்துக்கு வழி சொல்லிட்டுதான் சாப்பிடணும்!"

இதைக்கேட்ட நடராஜனுக்கு கோபம் வந்தது, முகம் சிவந்தது.

"பார்வதி! பேசாமல் போ!"

"முடியாது! களவுபோன பணம் கிடைத்தபின் தான் சாப்பிடவேண்டும்!"

"திருட்டுப்போன பணம் எப்படியடி வரும்?"

"எடுத்தவர்கள் கொடுக்கவேண்டும்!"

"யார் எடுத்தது என்று தெரியுமா?"

"தெரியாமல் என்ன! உங்ககிட்ட பணம் கேட்ட உங்க தம்பிதான் எடுத்திருக்கணும்."

பார்வதியின் இந்த பதிலைக் கேட்டதும் குமார் அதிர்ச்சியடைந்தான். தேள் கொட்டியவனைப்போல் துடித்து எழுந்தான்; அவன் முகத்தில் வியர்வை வழிந்தோடியது.

"அண்ணு! இனி நான் இந்த வீட்டில் இருக்க பிரியப்படவில்லை. இப்போதே வேறு வீடு போகிறேன்."

என்று சொல்லிக்கொண்டே குமார் கையைக் கழுவினுன்; தன் குழந்தை தேவராஜனை கையில் தூக்கினுன்; தன் மனைவி லட்சுமியை ஏறிட்டுப்பார்த்தான்; சோக உருவெடுத்து நின்றுகொண்டிருந்தாள்!

"லட்சுமி!... புறப்படு"

குமார், குழந்தை தேவராஜன், லட்சுமி ஆகிய மூவரும் வீதியை நோக்கி நடந்தனர். இதைக்கண்ட நடராஜன் மின்சாரத்தால் தாக்குண்டவனைப்போல பிரக்ஞை அற்று ஸ்தம்பித்திருந்தான். பாவம்—தந்தை மறைவு; சேகர் இல்லாத குறை—வறுமை. இதற்கு

மேல் பெரிய இடி இத்தனையும் நடராஜனை ஊமையாக்கியது.

ஆனால்—பெற்ற மனம் சும்மா இருக்குமா? வள்ளியம்மாள்ஓடோடி வந்தாள்.

"குமார்! போகாதே! என்னைத் தனியாக விட்டுப் போகாதே!"

தாயின் வேண்டுகோளைத் தட்டாதவன்தான்—குமார்! ஆனால்–தன்மானம், சுயமரியாதை ஆகிய இரண்டும் இல்லாத இடத்திலே இருப்பதை விட இறப்பதுமேல் என்று கருதினான் குமார்! வீட்டை விட்டு வீதிக்கு வந்துவிட்டான் குமார்! அப்போதும் பார்வதி விட்டாளா? பின் தொடர்ந்தாள்; குமாருக்கு முன்னேபோய் நின்று அவனைப் போகவொட்டாமல் தடுத்து நிறுத்தினாள்.

"எடுத்த பணத்தை கீழே வைத்துவிட்டுப்போ!"

இப்படி நடுரோட்டிலே நின்றுகொண்டு சண்டித்தனம் செய்தாள். பார்வதி! எதற்கும் ஒரு எல்லை உண்டல்லவா? நடராஜனால் பொருக்க முடியவில்லை. வீதியை நோக்கி வேகமாக வந்தான்.

"என் தம்பியை மறித்துப் பணம் கேட்க உனக்கென்னடி உரிமை?

இப்படி கூறியபடி பார்வதி கன்னத்திலே ஓங்கி அறைந்தான் நடராஜன். அந்த அடி, குமாரின் அவமானத்தை போக்கும் மருந்தாகிவிடுமா? வழிமறித்து நின்ற மதினி, விலகிவிட்டார்கள் என்று கருதி வீதியோடு விரைந்து சென்றான் குமார் குடும்பத்தோடு!

ஆனால்—அடிபட்ட பார்வதி அழுது கொண்டே வீட்டுக்குள் சென்றாள்

பார்வதியும், வள்ளியம்மாளும் ஆளுக்கொரு பக்க மாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தனர், அப்போது தான் பள்ளிக்குச் சென்றிருந்த மாணிக்கம் வந்தான். அம் மாவும், அண்ணியும் அழுது கொண்டிருப்பதைப் பார்த்த அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை,

'ஏம்மா. அழறே?"

பரிதாபமான குரலில் மாணிக்கத்தின் கேள்வி! பதில் சொல்ல முடியாமல் வள்ளியம்மாளின் தொண்டையை அழுகை அடைத்தது: குமாரின் சாமான்களை தூக்கிச் செல்ல அப்போதுதான் கூலி ஆட்களும் வந்தார்கள்.

"அம்மா; சாமான்களை எல்லாம் எங்கே தூக்கிச் செல்கிறார்கள்?"

மாணிக்கத்தின் மறுகேள்வியைக் கேட்ட வள்ளியம் மாள் மௌனமாக இருக்கவில்லை.

' உன் அண்ணன் குமார் தனி வீடு போகிறான்"

"என்ன?......என் அண்ணு போய் விட்டாரா? இதை ஏன் வந்த உடனே சொல்லவில்லை?...அண்ணு! அண்ணு!

என்று கதறிக்கொண்டே மாணிக்கம் வெளியே ஓடி னான்; அப்போதுதான் வெளியே இறக்கிவைக்கப்பட்ட சாமான்களை, உள்ளே இருந்த லட்சுமியிடம் தூக்கிக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

"அண்ணு!...அண்ணு!"

இந்தக் கதறலைக்கேட்டு குமார் திடுக்கிட்டு திரும்பி னான். தன் தம்பி மாணிக்ம் வருவதைக்கண்டான்.

"என்ன தம்பி!"

"அண்ணு ! நீ தனியாகப் போகக்கூடாது ! பிரிந்து போகக்கூடாது...அண்ணு ! அன்று சேகர் அண்ணு போய்விட்டார் ! இன்று நீ ! நாளே என் கதி என்ன அண்ணு?...இப்படியே நீங்கள் ஒவ்வொருவரும் வீட்டை விட்டுப் போய்விட்டால் ..நானும், அம்மாவும் எங்கே போவது ? வேண்டாம் அண்ணு ! நம் குடும்பம் சீரழிய வேண்டாம் ! என்னேடு வா அண்ணு ! வீட்டுக்குப் போகலாம் !"

மாணிக்கத்தின் அழுகுரலேக்கேட்டு குமார் மனம் இளகிப்போய், என்ன செய்வதென்று அறியாமல் தயங்கி நின்ருன். அப்போது வீட்டுக்குள்ளே இருந்த லட்சுமி தன் கணவனே உள்ளே வரும்படி அழைத்தாள். குமார் உள்ளே செல்ல முயர்ச்சித்து கால்களே தூக்கி வைத்தான்; ஆனுல் மாணிக்கம் விடவில்லே. முன்னே போய் நின்று கொண்டு தடுத்தான்.

"அண்ணு ! நீ வீட்டுக்குள் போகக்கூடாது உன்னே விடமாட்டேன்," என்று மாணிக்ம் கூறிக்கொண்டிருக்கும்போது மீண்டும் லட்சுமி குமாரை அழைத்தாள், குமார் நகர ஆரம்பித்தான்; மாணிக்கம் வாசல் நடுவே கால் நீட்டி படுத்துவிட்டான்.

"அண்ணு ! என் பேச்சை கேட்காமல் நீ வீட்டுக்குள்ளே போவதென்ருல் என்னேக் கொன்றுவிட்டு போ!"

இப்படி உறுதியாகவே மாணிக்கம் கூறினுன்; பித்துப்பிடித்தவனேப்போல குமார் நின்றுவிட்டான்; அவன் தலே சுழன்றது.

"உம் ! வாருங்கள்"

உள்ளே இருந்தபடியே கூறினுள் லட்சுமி ! குமார் அசையாமல் நிற்பதைப் பார்த்து, எட்டி கையைப்

பிடித்து உள்ளே இழுத்தாள்; தன் தம்பி மாணிக்கம் படுத்திருப்பதையும் மறந்து தாண்டி உள்ளே சென்றான், குமார் !

மாணிக்கம் எழுந்தான்; வீட்டுக்குள்ளே சென்ற அண்ணனைக் கூப்பிட்டான்! பதில் இல்லை, ''மதினி நீங்களாவது மனமிரங்குங்கள் ;'' —என்று மன்றாடினான் !

இதைப் பார்த்து வீதியிலே பெறுங்கூட்டம் கூடிவிட்டது; எல்லோரும் பரிதாபப்பட்டார்கள்;

''அடடே ! தேவராஜர் குடும்பம் இப்படியா போகணும்? இவன் இங்கே பிரிஞ்சி வந்துட்டான் ! அங்கே கடன்காரன் தெவராஜர் வீட்டை ஜப்தி செய்கிறான்.

கூட்டத்திலே ஒருவன் இரக்கப்பட்டு இப்படிப் பேசினான், இதை மாணிக்கம் கேட்டுவிட்டான்.

''ஜப்தி! . எங்கள் வீட்டிலா ஜப்தி ?''

தீயை மிதித்தவனைப்போல் மாணிக்கம் தன் வீட்டை நோக்கி ஓடினான்.

## 21. அட்டைப் பூச்சிகள் !

வட்டிக்கடை நடத்துபவர்கள் சாதாரணமானவர்களா ? மனித சமுதாயத்திலே வாழும் அட்டைப் பூச்சிகள் ! ஏழை மக்களை கசக்கிப் பிழியவும், இரத்தத்தை உறிஞ்சவும் அவர்களுக்கு உரிமை உண்டு ! சாதாரண இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழும் அட்டைப் பூச்சிகளை யாரும் அடித்துக் கொல்லலாம் ! ஆனால் தொழிலாளர் வர்க்கத்தின் ஜீவனை, மூச்சை வினாடிக்கு வினாடி விலை பேசும் இந்த விஷப் பூச்சிகள், சட்டப்படி பாதுகாப்பு

பெற்றவைகள்! இந்த விஷப்பூச்சிகளின் மூச்சு யார் மேல் பட்டாலும் மீள முடியாது. இதுகளால் அழிந்த மக்கள் தொகை, குடும்பங்களின் எண்ணிக்கை கோடானு கோடி!

அதிலே நடராஜன் குடும்பம் சிக்கியது. சேகரின் படிப்புக்கு, குடும்பச் சிலவுக்கு நடராஜன் வாங்கிய பணத்திற்கு, இதுவரை வட்டிதான் அடைப்பட்டிருந்தது; மீதி பணத்திற்கு மார்வாடி ஜப்தி வாரண்டுடன் வந்திருந்தான். இரக்கம் என்றால் என்ன அர்த்தம் என்று கேட்கும் வர்க்கந்தானே, பண மூட்டைகள்!

ஆனால்—அந்த மார்வாரியிடம் கருணை இருந்தது என்றுதான் சொல்லவேண்டும்! விரும்பி இருந்தால் நடராஜனின் வீட்டையே பறித்திருக்கலாம்! அந்த மார்வாடி பரோபகாரியாக இருக்கப்போய் சாமான்கள் மட்டிலும் ஜப்தி அதிகாரத்தை ஏவினான்! வீட்டில் உள்ள ஒவ்வொரு சாமானும் வெளியே தூக்கி வைககப்பட்டன.

மாணிக்கம் ஓடிவந்தான்; தன் வீட்டுசாமான் தலை விரிகோலமாய் தெருவில் கிடப்பதை கண்டான்; அவனை அறியால் ஆத்திரம் பொங்கியது. மார்வாடியை அடிக்க ஓடினான்.

"தம்பி! இங்கே வா!"

"முடியாது, இந்தக்கூட்டத்தையே நாட்டை விட்டு ஓட்டவேண்டும்!"

"நீ கடனாளி! அவன் முதலாளி!"

"ஆம்! சுரண்டி சுகம் பெற்றவனை சும்மா விடக்கூடாது!"

"தொல்லையை விலைக்கு வாங்காதே வா இங்கே"

நடராஜனின் கோபமான வார்த்தைகளைக்கேட்ட மாணிக்கம் பணிந்து போகவேண்டியதாயிற்று. மார்வாடி தன் வேலையை முடித்துக்கொண்டு சென்றான்; வீடு 'வெரிச்'சென்று மடம்'போலக் காட்சியளித்தது. துன் பத்திற்கு மேல் துன்பம், எல்லோரும் அழுது; கொண் டிருந்தார்கள்,நடராஜன் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

தன் பழைய வீட்டுச் சாமான்கள் ஜப்தி ஆகிவிட்டது என்பதை அறிய குமார் அளவு கடந்த வேதனை அடைந் தான். பிரிந்த அன்றே பிறந்த இடத்தில் பெருந்துக்கம் வந்துவிட்டதே என்று வருந்தினான்,

எல்லோருக்கும் சாப்பாட்டை தன் வீட்டிலேயே தயாரித்தான் குமார்; தான் போக மனமில்லாமல், வேற் றான் ஒருவனிடம் உணவை கொடுத்தனுப்பினான்,

நடராஜன் முகத்திலே பிரேதக்களை வீசியது. தன் குடும்பம் நாளுக்கு நாள் நலிந்து வருவதை நினைத்து நினைத்து வேதனைப்பட்டான்.

லீலாவுக்கு வீட்டு நிலையை நினைத்து கவலை ஒரு புர மும், கணவன் இல்லாமல் 'வாழாவெட்டி'யாக இருக்கி றோமே என்ற எண்ணம் ஒருபுறமும் சேர்ந்து அழுகை யை உண்டாக்கியது.

இவை எல்லாவற்றையும் பார்த்த வள்ளியம்மாள் லீலா தன் மகன் இன்றி வாடுகிறாளே என்று வருந்தினாள்; எப்படியும் அவள் வாழ வகை செய்யவேண்டும் என்று எண்ணி தன் மகன் நடராஜனிடம் சென்றாள்.

நடராஜா! நான் சொல்வதை தயவு செய்துகேள். நடந்ததை எல்லாம் மனதில் போட்டுக்கொள்ளாதே ! சேகர் எங்கிருந்தாலும் சரி தேடிப்பிடித்து கூட்டிவா !'

அழுதுகொண்டே வள்ளியம்மாள் நடராஜனிடம் முறையிட்டாள்.

" அம்மா ! சேகரைப்பற்றி பேசவேண்டாம்! வேறு ஏதாவது சொல்லுங்கள் செய்கிறேன்."

வெறுப்புடன் கோபமாகவே இந்த பதிலை கொட்டினான் நடராஜன் ; இதைக் கேட்டுக்கொண்டிருந்த லீலா சப்தம்போட்டு அழ ஆரம்பித்தாள் ; வள்ளியம்மையால் தாங்க முடியவில்லை.

"லீலா அழுது அழுது சாகனும்னு நினைக்கிறாயா ? உன் தாய் சொல்றேன் : சேகரைத் தேடப்போகிறாயா. இல்லையா ?...

கொஞ்சம் கடுமையாகவே வள்ளியம்மாள் கேட்டாள் ; அதைக் கட்டளையாகவே கருதினான் நடராஜன்.

## 22. ஆராய்ச்சி.

டாக்டர் சேகருக்கு எந்த நேரமும் மருந்து ஆராய்ச்சிதான். நோயாளிகளை பெரும்பாலும் நளினாவையே கவனிக்கச் செய்தான் சேகர் ! விசிட்டிங்கூட தான் அதிகமாக போவதில்லை. ரொம்பவும் மோசமான நிலையில் யாரும் வந்தால்தான் சேகர் கவனிப்பது வழக்கமாயிருந்தது. இதனால் விருதுநகர் மக்களிலே பலருக்குக்கூட சேகரைத் தெரியாமல் இருந்தது.

ஏதாவது டீ பார்ட்டி, பெரிய உத்தியோகஸ்தர், மந்திரி ஆகியோர் சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சிக்கும் சில பெரிய மனிதர்கள் (!) செல்வதுபோல சேகர் செல்வதே இல்லை.

நேரத்தை வீணாக்காமல் சதா ஆராய்ச்சிதான். நளினாவும் சேகரும் ஒரே பங்களாவில் வாழ்ந்தும்கூட அதிக நேரம் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருக்கவே நேரமிருப்பதில்லை.

" வாருங்கள் 'பார்க்குக்கு' போகலாம்! "

" ஓர்க் இருக்கிறது."

" சினிமாவுக்கு போகலாமா? '

" தனிமையாக இருக்க விரும்புகிறேன்."

" குற்ருலம் போகலாம் ஒருவாரம் "

" நோயுற்றவர்களின் கதி? '

நளினு கேள்விகளுக்கெல்லாம் சேகர் இப்படி ஏதாவது சொல்லிவிட்டு ஆராய்ச்சியில் ஈடுபடுவான்; நளினுவுக்கு இந்த ஆராய்ச்சியே பிடிப்பதில்லை.

" நளினு! இந்திய டாக்டர்களெல்லாம் வெறும் இயந்திரங்கள்!"

" அலட்சியமான அபிப்பிராயம்."

" இல்லை! நாம் இயக்கினுல்தான் இயந்திரம் ஓடும், தானுக இயங்கும் சக்தி அதற்கு கிடையாது! அதைப் போலத்தான் நம் நாட்டு டாக்டர்களும்!"

" தெளிவாக சொல்லுங்களேன்."

" இந்த வியாதிக்கு அந்த மருந்தை சாப்பிடுங்கள் என்று சொல்லுவார்களே தவிர, அந்த மருந்து எப்படித் தயாரிக்கப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியாது!"

" இந்த வியாதிக்கு இதுதான் மருந்து என்று தெரிந்தால் அதுவே போதும்!"

" அந்த மருந்து கடையிலே கிடைக்காவிட்டால் வியாதியஸ்தர்கள் சாவதா? அந்த டாக்டருக்கே அந்த மருந்தை தயாரிக்கும் சக்தியிருந்தால்..... ......அன்னிய நாட்டு மருந்து ஆதிக்கமும் இருக்காது; ஆபத்தான நிலையும் வராது.

" உங்களைப்போல் ஆராய்ச்சியில் ஈடுபட்டால் இந்த குறை நீங்கிவிடுமா?"

"முற்றிலும் சீர்படவேண்டுமானால் அரசாங்கம் இதை கவனித்து வைத்திய கல்லூரி பாடதிட்டத்தை மாற்ற வேண்டும்."

இப்படி சில உரையாடல்கள் நளினாவுக்கும் சேகருக்கும் அடிக்கடி நடக்கும். அன்று நளினா தன் படுக்கையையும் தூக்கிக் கொண்டு ஹாலை நோக்கி வந்தாள். சேகருக்கு ஒரே ஆச்சரியம்.

"எங்கே பயணம் நளினா ?"

"உம்! உம்! நீங்களும் புறப்படுங்கள். ஒருவாரம் கிராம சேவை செய்து வரலாம்!" என்று நளினா கூறியதும் சேகர் தலை சுழன்றது. 'கிராமம்'—சேகர் வாய் முணுமுணுத்தது.

"நடராஜா ! உன் தம்பி சேகரை ஒரு டாக்டராக்கு! இந்த கிராமத்திலே ஒரு ஆஸ்பத்திரி திறக்க ஏற்பாடு செய் !"

தன் தந்தை சாகும்போது கூறிய இந்த வேண்டுகோள் நினைவுக்கு வந்தது. வேதனை அதிகரித்தது.

"கிராமத்தைப் பற்றி பேச்சை என்னிடம் எடுக்காதே ! நீ வேண்டுமானால் போய் வா. நான் வரவில்லை ! '

இப்படி ஆத்திரத்தோடு சேகர் பேசியதை கேட்ட நளினாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'கிராமம்' என்ற உடனே சேகருக்கு ஏன் இந்த துடிப்பு ? இது ஒரு புதிராகவே நளினாவுக்குப்பட்டது.

" ஏன் கிராம சேவை பிடிக்கவில்லை ?"

" ஆம் ! கிராமம் நரகம் ! அதை வெறுக்கிறேன்,"

"கிராமம் நரகம்! பட்டணத்திலே பிறந்தவன்கூட இப்படிச் சொல்லமாட்டானேடா!"

இப்படி கோபமாகக் கூறிக்கொண்டே சேகர் முன்னிலையில் நடராஜன் நின்றான்; சேகர் ஸ்தம்பித்து போனான். வந்தவர் யார், சேகர் இப்படி இருக்கக் காரணம் என்ன நளினாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

'சேகர்! யாரோ வந்திருக்கிறார்கள், என்னவென்று கேளுங்கள் போங்கள்!'

இப்படி நளினா மீண்டும் மீண்டும் கூறியும் சேகர் அசையா பொம்மை போலவே இருந்தான்.

"அவனா பேசுவான்? நகரிலே பிறந்த நாகரீகச் சீமானல்லவா? பேசினால் கௌரவக்குறை ஏற்படாதா?'

நடராஜன் படபடப்புடன் கூறினான். நளினாவுக்கு என்ன நடக்கிறது என்று ஒரே குழப்பமாய் இருந்தது. சேகரை கேட்டுப் பதில் பெறாத நளினா. வந்தவர் பக்கத்திலே சென்றாள்.

"ஐயா! நீங்களாவது யார் என்று சொல்லுங்களேன்?"

"நான்!.....நான் இவன் அண்ணன்!"

"அண்ணா!..சேகர்! சேகர்! அண்ணன் வந்தும் மௌனமாய் இருப்பதா? பேசுங்கள்! பேசுங்கள்!"

"அவன் எப்படி பேசுவான்? பணக்காரன் ஏழையோடு பேசுவானா? மாடிவீட்டுக்காரனுக்கு குச்சுவீட்டுக்காரனோடு என்ன பேச்சு இருக்கிறது?...அடே சேகர்! நாங்கள் சீரழிகிறோம்! நீ சிங்காரமாய் இரு! நாங்கள் அலைமோதுகிறோம்! நீ ஆனந்தமாய் இரு! நாங்கள் சாகிறோம்! நீ சந்தோஷமாய் இரு!"

கண்ணீர் கலங்கிய கண்களுடன், ஆனால் கனல் கக்கும் முறையில் கடுங்கோபத்துடன் இப்படி நடராஜன் கூறியதும் அங்கே ஒரு விநாடி கூட நிற்கவில்லை. "ஐயோ! நில்லுங்கள்" — என்று நளினா கூப்பிட்டுப் பார்த்தாள்; நடராஜன் வேகமாக நடந்துவிட்டான்.

"சேகர்! உங்கள் அண்ணாவைக் கூப்பிடுங்கள்!"

நளினா கெஞ்சினாள்; சேகர் சிலைபோன்ற நிலையில் இருந்தான்.

"சேகர்! யாருமில்லாத அனாதை என்று சொன்னீர்களே, இப்போது அண்ணன் வந்திருக்காரே, உங்கள் குடும்ப வரலாறுதான் என்ன? எந்த ஊர்? எங்கே வீடு? சொல்லமாட்டீர்களா?"

"என்னை தொந்திரவு செய்யாதே, குடும்பப் பேச்சை பேசாதே! தயவுசெய்து என்னைத் தனிமையாக இருக்க விடு!"

சேகரின் இந்த பதிலைக் கேட்டதும் வேறு வழியின்றி நளினா கிராம சேவைசெய்ய வெளியேறினாள்.

## 23 தீ! தீ!! தீ!!!

நடராஜனையும் சேகரையும் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் வள்ளியம்மாள். வாடிய முகத்துடன் நடராஜன் மட்டும் வந்தான். தன் கணவரைப் பற்றி ஏதாவது செய்தி சொல்வார் என்று ஆனந்தப்பட்டு மறைவாக நின்று பேச்சைக் கவனித்தாள் லீலா.

"நடராஜா! சேகரை பார்த்தாயா? எங்கிருக்கிறான்? என்ன சொன்னான்? எப்பொழுது வருவான்!"

வள்ளியம்மாள் ஆசையோடு இப்படி கேட்டாள். நடராஜன் பதில் சொல்லவேயில்லை; லீலா கலங்கினுள் தாய் பாசம் லேசானதா? மீண்டும் துளவினுள் வள்ளி யம்மாள்.

''அம்மா! அவனைப்பற்றி என்னிடம் பேசாதே! சேகர் செத்துவிட்டான் என்று நினைத்துக்கொள்.''

நடராஜனின் இந்த பதிலைக் கேட்டதும் வள்ளியம் மாளுக்கு 'பகீர்' என்று இருந்தது' லீலா மயங்கி கீழே விழுந்தாள். வள்ளியம்மாள் ஓடிப்போய் — லீலாவைத் தூக்கினுள். அப்போது ஒருவன் வீட்டுக்குள் ஓடி வந்தான்,

''ஐயோ! தீ! தீ! உங்க குமார் வீட்டிலே தீ பற்றி எறிகிறது.''

ஓடிவந்தவன் கூறியதைக் கேட்ட நடராஜன் சுய உணர்வு பெற்றுன்.

''என்ன? என் தம்பி வீட்டில் தீயா? குமார்! குமார்!''

இப்படி கத்திக்கொண்டே நடராஜன் ஓடினுன். குமார் வீடு தீ பற்றி ஜுவாலை விட்டு எரிந்து கொண் டிருந்தது. குமாரும் அவன் மனைவி லட்சுமியும் வெளி யில் நின்று அலறிக்கொண்டிருந்தார்கள்.

''ஐயோ என் குழந்தை உள்ளே சிக்கிவிட்டதே! காப்பாற்றுவார் இல்லையா?

லட்சுமியின் இந்த கதறல் நடராஜன் காதில் விழுந்தது.

இப்படி சொல்லிக்கொண்டே நடராஜன் தீயினுள் புகுந்தான்; உள்ளே குழந்தை தேவராஜன், "அம்மா! அம்மா!" என்று அழுதுகொண்டு நின்றான். தேவ ராஜனை சுற்றிலும் தீ நன்றாக எரிந்துகொண்டிருந்தது. அந்த இடத்திற்கு நடராஜன் செல்ல நினைத்தான்; அப் பொழுது எரிந்துகொண்டிருந்த கட்டை ஒன்று நடராஜன் மேலே விழுந்தது. அதை லட்சியம் செய்யாமல் நடரா ஜன் அந்த இடத்தை அடைந்தான்; குழந்தையை தூக்கி அணைத்துக்கொண்டான். வெளியில் வர முடியாதபடி தீ சுற்றி வளைத்துக்கொண்டது. குழந்தையாவது பிழைக் கட்டும் என்ற முடிவில் தீயிலேயே நடந்து நடராஜன் வெளியேறினான்; அவன் உடையில் தீ பற்றியது தீ எரிய எரிய தாங்கிக்கொண்டே வெளிவந்தான்; குழந் தையை இறக்கி விட்டுவிட்டு கீழே விழுந்தான். தேவ ராஜனை லட்சுமி வாரி எடுத்துக்கொண்டாள்.

ஆனால் நடராஜன்?

மரணப் படுக்கையிலே கிடந்தான். கண் எல்லாம் வெந்துவிட்டது. "தண்ணி! தண்ணி!" என்று புலம் பிக்கொண்டே நடராஜன் கட்டிலில் கிடந்தான்.

"ஐயோ! டாக்டரை கூப்பிடுங்கள்! டாக்டரை கூப்பிடுங்கள்!"

இப்படி வள்ளியம்மாளும் பார்வதியும் ஒப்பாரி வைத்தார்கள்.

"அம்மா ஏன் இப்படி கண்ணீர் விடுகிறீர்கள்? டாக்டர்தான் நம் கிராமத்தில் கிடையாதே! அதனால் தானே இதே தீ விபத்தால் தந்தை மாண்டார்! இன்று

எனக்கும் அந்த கதிதானம்மா! டாக்டரை கூப்பிடாதே! அவர் இங்கு இல்லை!"

இப்படி நடராஜன் சொல்லும்போது ஒருவன் ஓடி வந்தான்.

"பயப்படாதீங்க. இன்று நம்ம கிராமத்திற்கு ஒரு டாக்டரம்மா வந்திருக்காங்க."

இதைக் கேட்ட வள்ளியம்மாள் தயவுசெய்து அழைத்துவர வேண்டினாள். எதிர்பாராத விதமாக கிராம சேவைக்கு வந்த நளினா அங்கு வந்துசேர்ந்தாள். முதற் சிகிச்சை செய்ய நோயாளி பக்கத்தில் சென்றாள் நளினா. கண்கள் திறக்க முடியாமல் காயமடைந்திருந்தது. அப்படியிருந்தும் சேகரின் அண்ணன்தான் என்று தெரிந்துகொண்டாள்; திடுக்கிட்டு என்ன செய்யலாம் என்று யோசித்தாள். அவள் கண் எதிரே சுவரில் மாட்டப்பட்ட போட்டோவில் சேகர் சிரித்துக்கொண்டிருந்தான்.

ஒரு முடிவுக்கு வந்தவள்போல் மருந்து பெட்டியை மூடினாள்; புறப்பட ஆயத்தமானாள். வள்ளியம்மாள் தடுத்து நிறுத்தி, மன்றாடினாள்; கெஞ்சினாள்.

ஆனால் நளினா?

"என்னால் சிகிச்சை செய்ய முடியாது. நான் போய் ஒரு நல்ல டாக்டரை உடனே அனுப்பி வைக்கிறேன்."

இப்படி சொல்லிவிட்டு நளினா நடக்க ஆரம்பித்தாள்; அதுவரைக்கும் கண்ணீர் விட்டுக்கொண்டே நின்ற லீலா ஓடி வந்தாள். நளினாமுன் மண்டியிட்டாள்.

"அம்மா உங்களால் முடிந்தால் தயவு செய்து சிகிச்சை செய்யுங்கள்; ஏழைமீது இரக்கப்படுங்கள்"

இப்படி லீலா கெஞ்சியதைப் பார்த்து நளினுவுக்கு கூட கண் கலங்கியது.

"கவலைப்படாதேயம்மா, எழுந்திரு. நீதான் அவர் மனைவியா?"

இப்படி நளினு கேட்டதும் லீலா 'கோ'வென அழ ஆரம்பித்தாள்.

"அழாதே! உன் புருஷனுக்கு ஒருதீங்கும் வராது"

"என் புருஷன் அவரல்ல. அதோ...அந்தப் படத்தில் இருக்கிருரே......"

"அவரா உன் புருஷன்?!"

நளினு வாயில் இருந்து அதிர்ச்சியோடு இந்த வார்த்தைகள் வெளிவந்தன. அவள் தலை வெடித்துவிடும் போல் இருந்தது

"சேகர்! கல்யாணமாகாதவர் என்று சொன்னீரே! என் எண்ணமெல்லாம் வெறும் அரக்கு மாளிகைதானு?"

நளினு உள்ளத்திலே எழுந்த எண்ணம்! நளினு அதன்பின் அங்கு நிற்கவே இல்லை. காரை ஓட்டிக் கொண்டு நளினு புறப்பட்டாள்.

## 24 போகிறேன், போகாதே!

நளினு கார் விருதுநகரை நோக்கி கடும் வேகமாக வந்துகொண்டிருந்தது; நளினுவின் மனம் குழம்பிப்போய் பல சிந்தனையில் சிக்கியிருந்தது.

"சேகர் இன்னொருத்தியின் கணவரா? இந்த ஜென்மத்தில் அவர் என் காதலரில்லையா? அவரை அடைய மாட்டேனு?"

சேகர்! என் வாழ்வு கனவுதானு? என்னென்ன நினைத்தேன்? இருவரும் ஒரே தொழில் பயின்று புகழ் பெற்று புருஷன் மனைவி என்று எப்படியும் வாழ்வோம் என்று மனக்கோட்டை கட்டியிருந்தேனே. அது அத்தனையும் கானல்தானு?

இப்படி ஏதேதோ நினைத்துக்கொண்டு வந்தாள் நளினு! ஒரு திருப்பத்தில் கார் மரத்திலே மோதியது. நளினு தூக்கி எரியப்பட்டாள்.

நளினு கண்விழித்துப் பார்க்கிறபோது, தன் ஆஸ்பத்திரிக்கே தான் கொண்டுவரப்பட்டிருப்பதை உணர்ந்தாள். நளினுவுக்கு சேகர் சிகிச்சை செய்ய ஆரம்பித்தான், ஆனுல் நளினு தடுத்தாள்.

"சேகர் நீங்கள் எனக்கு சிகிச்சை செய்யவேண்டாம், உங்கள் அண்ணு தீயில் வெந்து சாகும் நிலையில் இருக்கிருர்; உடனே அங்கு புறப்படுங்கள்."

"முடியாது! உன்னை இந்த நிலையில் விட்டுவிட்டு எங்கும் போகமாட்டேன்."

சேகர்! இருவரையும் உங்களால் காப்பாற்ற முடியாது! உங்கள் அண்ணுவை காக்க புறப்படுங்கள்!

"அதெல்லாம் முடியாது. உன்னைக் காப்பாற்றிவிட்டுதான் அடுத்த வேலை."

இப்படி ஆணித்தரமாக பதில் சொல்லிய சேகர் மருந்தை கலக்க பாட்டிலை கையில் எடுத்தான்; எதிரே

தன் தாய் வள்ளியம்மாள் நிற்பதை பார்த்தான் ; புலியைக் கண்டவன்போல் மிரண்டு நின்றான்.

" உம்! புறப்படு ! " தாயின் கட்டளை.

" எங்கே ? "

" உன் அண்ணனைக் காப்பாற்றவேண்டும் ! "

" நான் நளினாவைக் காப்பாற்றவேண்டும் " !

சேகரின் இந்தப் பதிலைக் கேட்ட நளினா குறுக்கிட்டாள்.

" சேகர் தயவுசெய்து புறப்படுங்கள் ! "

இப்படி நளினா சொல்லியும், நகராத கல்லைப்போல நின்றான் சேகர், நளினா விடவில்லை.

" என்மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால் உடனே புறப்பட்டு உங்கள் அண்ணாவைக் காப்பாற்றுங்கள். "

நளினாவின் இதயத்திலிருந்து வந்த இந்த வெறும் வார்த்தைகள் துப்பாக்கி குண்டுகளைப்போல் சேகரைத் தாக்கின; நளினாவை ஒருமுறை பார்த்தான் ; தயங்கினான்.

" அடே சேகர் ! உன் அண்ணன்-உன்னை ஆளாக்கி விட்ட அண்ணன்-உன்னை படிக்கவைத்த அண்ணன்-செத்துக்கொண்டிருக்க, உன் தாய்-உன்னை பெற்று வளர்த்த தாய்-தேடி வந்து உயிர்பிச்சை கேட்கிறேன் முடியாது என்று சொல்லுகிறாய் ? " என்று கூறிக் கொண்டே சேகரின் கன்னத்தில் ' பளீர் ' என்று அறைந்தாள் வள்ளியம்மாள் ; கையில் இருந்த பாட்டில் 'படார்' என்று உடைந்தது.

" சேகர் ! "

இப்படி நளினு கூப்பிட்டதும் அக்கட்டிடமே அதிர்ந்தது.

"நளினு! நளினு!"

சேகர் ஓடிப்போய் நளினுவைத் தூக்கி மடியில் வைத்தான்.

"போங்கள்! வருகிறேன்"

நளினுவின் கடைசி வார்த்தைகள்! 'போங்கள் வருகிறேன்' இந்த வார்த்தைகளை அந்தக் கட்டிடம் எதிரொலித்துக்கொண்டே இருந்தது.

"நளினு! போகிறேன்! நீ போகாதே!" .

சேகர் அலறினன், அலறினன்! ஆனல்-அமைதியான இடத்திற்கு நளினு போய்விட்டாள்.

## 25. கனவு நனவாயிற்று!

வள்ளியம்மாள் காரிலே ஏறி உட்கார்ந்தாள்; கண்ணீர் தோய்ந்த கண்களோடு சேகர் விரைந்து ஓட்டினன், பாலைவனம் நோக்கி.

சேகர் காரைவிட்டு வீட்டுக்குள் நுழைந்ததும், லீலாவுக்கு ஒரே ஆனந்தம். ஆனல் மெய்மறந்து கண்ணீர்விட்டு நின்ருள். கிராம மக்கள் எல்லோரும் சேகரைப் பார்த்து ஆச்சர்யமடைந்தனர்.

நடராஜனுக்கு வேண்டிய சிகிச்சை செய்தான் சேகர். தான் அற்புதமாக கண்டுபிடித்த மருந்தையும் நடராஜனுக்கு உபயோகப்படுத்தினன். நடராஜனின் உருவம் தெரியாமலே கட்டுகள் கட்டப்பட்டிருந்தன.

வள்ளியம்மாள் வீட்டில் சேகர் வந்த தினத்தில் இருந்து இன்பம் பொங்க ஆரம்பித்தது. பிரிந்து சென்ற குமார் ஒன்ருக வந்து சேர்ந்தான். நாட்கள் கடந்தன.

நடராஜனின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. குருடனுகி விடுவோமோ என்று சந்தேகப்பட்டிருந்த நடராஜன் ஒளியின் நடுவே தன் தம்பி சேகர் நிற்பதை கண்டு மகிழ்ந்தான். அதுமட்டுமா ?

நவீன மருத்துவ விடுதி
டாக்டர் சேகர் எம். பி. பி. எஸ்.

இப்படி ஒரு பலகை எதிரே இருந்த கட்டிடத்திலே தொங்கிக்கொண்டிருந்தது

"கிராமத்திலே ஆஸ்பத்திரி வந்துவிட்டதா ? என் தந்தையின் கனவு நனவாயிற்ரு ?"

இதைச் சொல்லிச் சொல்லி பூரித்தான் நடராஜன். வாழ்விலே இதுவரை வேதனையை தவிர வேறு ஒன்றும் அறியாத லீலா 'நர்ஸ்' ரூபத்திலே நின்றதை கண்ட நடராஜன் கண்களில் ஆனந்த கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

"சேகர் அண்ணே கோவிச்சுக்கிட்டு போகாட்டா இந்த பட்டிக்காட்டிலே ஆஸ்பத்திரி நிச்சயமா வந்திருக்காது"

குறும்பு கலந்த பேச்சில் இப்படிக் கூறினுன் இளையவனுன மாணிக்கம்.

"ஆமாம் ! நடப்பதெல்லாம் நன்மைக்கே !"

இது வள்ளியம்மாள் வாயில் இருந்து வந்த பொன்மொழி !

"அண்ணு! இனி உங்களை விட்டு ஒரு க்ஷணமும் பிரியமாட்டேன்! இனி கிராம சேவையே என் லட்சியம்!"

இது சேகரின் தேன்மொழி!

"நீயும் லீலாவும் எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ வேண்டும்!"


இது நடராஜன் அன்புமொழி!

"டாக்டர் சேகர் வாழ்க! நளினு மருத்துவ விடுதி ஓங்குக!"


இது கிராமத்தின் வாழ்த்தொலி!

**முற்றும்.**

x7mk:7



விலை 1 - 50



விலை 1 - 50

முத்து புத்தக நிலையம்

மேலப்புலிவார்டு ரோடு :: திருச்சி-2

Wrapper printed at Valluvar Achagam, Tiruchy-8.